2019

ஆண்டறிக்கை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

21.08.2020

கேளரவ பந்துல குணவர்தன
வர்த்தக அமைச்சகம்,
27, சி.டப்லியு.ஈ. செயலகம் கட்டிடம்,
வோக்சோல் வீதி,
கொழும்பு 02.

மதிப்பிற்குரிய ஐயா

கணக்கியல் கூற்று மற்றும் ஆண்டறிக்கை– 2019

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இற்கு அமைவாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, இயக்குனர்கள் சபை சார்பாக சமர்பிப்பதில் நான் மகிழ்வடைகிறேன்.

- தலைவர் அறிக்கை
- கணக்கியல் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தங்கள் உண்மையுள்ள,

பிரபாஷ் சுபசிங்ஹ
தலைவர்
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

பொருளடக்கம்

		பக்கம்
1.	எங்கள் சுயவிபரம், தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்	69
2.	தலைவர் அறிக்கை	70
3.	நிறுவன தகவல - பணிப்பாளர்கள் சபை	71-72
	- சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியினர்	73
4.	ஏற்றுமதி செயல்திறன் - 2019	74
	இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றுகை 2019	75
	ஏற்றுமதி வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பாளர்கள்	76-79
	தேசிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்	80-85
	தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டம்	86
	ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வசதியளித்தல்	87-100
	2020 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்	101-103
5.	நிதி அறிக்கை 2019	104
	நிதி நிலைக் கூற்று	105
	விரிவான வருமானக் கூற்று	106
	சமநிலை மாற்றக் கூற்று	107
	காசுப் பாய்ச்சல்க் கூற்று	108
	கணக்கியல் குறிப்புக்கள்	109-119
6.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	120-128

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பற்றி

ஏற்றுமதிச் சம்பாத்தியத்தை அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு பங்களிப்பை வழங்கும் நோக்கத்துடன் இலங்கையின் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதான பணியாகும்.

1979 ஆம் ஆண்டின் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக புதிய உபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் கொள்கை ஆலோசகர், கண்காணிப்பாளர், ஊக்குவிப்பாளர், வசதியளிப்பாளர், அறிவு வழங்குனர் என்ற வகையில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதன் பங்களிப்பை ஆற்றி வருகின்றது.

VISION

இலங்கையை புதுமையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான ஒரு முக்கிய ஏற்றுமதி மையமாக நிறுவுதல்.

MISSION

புதிய கண்டுபிடிப்பு, தொழில்முனைவு மற்றும் உலகளாவிய ஒன்றிணைவு மூலம் ஏற்றுமதிப் போட்டித்திறனை ஏற்படுத்தல்.

குறிக்கோள்கள்

- 2022 ஆம் ஆண்டளவில் வர்த்தகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் மூலம் ஐ.அ.டொ. 28 பில்லியன் வரை அந்நியச் செலாவணி சம்பாத்தியத்தை அதிகரித்தல்.
- 2022 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி இடையிலான விகிதத்தை 25% ஆக அதிகரித்தல்.
- தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தில் இலக்கு வைக்கப்பட்ட துறைகளின் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தை 10 - 20% ஆக அதிகரித்தல்.
- ஏற்றுமதியில் ஈடுபடாத 2000 உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை ஏற்றுமதியாளர்களாக மாற்றுதல்.
- புதிய 4 - 5 உற்பத்திகளை/ சேவைகளை [இலத்திரனியல், மின் காப்பிடப்பட்ட கம்பிகள், தானியங்கி மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், உணவு பதனிடல் கைத்தொழில், வலையமைப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் (IOT) போன்றவை] ஏற்றுமதி தொகுதிக்குள் உள்ளடக்குதல்.

தலைவர் அறிக்கை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (நுனுடீ) தனது 40 வது ஆண்டு நிறைவை 2019 இல் கெண்டாடியது. இது ஒரு மைல்கல் அல்லது வெறும் எண் மட்டுமல் இது கடந்த நான்கு தசாப்தங்களாக நுனுடீ மேற்கொண்ட வலுவான முன்னேற்றத்தைக் குறிக்கிறது மற்றும் இலங்கையை உலக வரைபடத்தில் வைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் - நுனுடீ என்பது நாட்டின் உச்ச அரச வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு (வீழு). இது சர்வதேச வர்த்தகம் தொடர்பான அனைத்து விடயங்களுடனும் தொடர்புடைய ஒரு குடை அமைப்பின் பாத்திரத்தை வகிக்கிறது. அதன் தொடக்கத்திலிருந்தேஇ நுனுடீ நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய ஏற்றுமதியை மேம்படுத்துதல்இ ஏற்றுமதி தொகுதிகளை மற்றும் ஏற்றுமதி சந்தைகளை பல்வகைப்படுத்துதல்இ புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற தனது தொலைநோக்கை நிறைவேற்ற முழமையாக உறுதியளித்துள்ளது. இலங்கையில் ஏற்றுமதி முயற்சிகளில் முதலீடு செய்வதற்கு உகந்த சூழலை உருவாக்குவதன் மூலம் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதியாளர் சமூகத்தை இலகுபடுத்துவதற்கும் நாங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.

பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில்களை அதிகரிப்பதன் ஊடக ஏற்றுமதி பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கையை வளமான தேசமாக உருவாக்குவதே அரசாங்கத்தின் கவனமிருப்பதுடன் வெறுமனே பாரம்பரிய ஏற்றுமதியை சார்ந்திருப்பதில்லை.

இலங்கையின் அதிகரித்துவரும் ஏற்றுமதி திறனைக் கருத்தில் கொண்டுஇ ஒரு வினையூக்கி மற்றும் ஊக்குவிப்பாளராக ஏற்றுமதி மேம்பாடுஇ ஊக்குவிப்பு மற்றும் வசதி செய்வதில் நுனுடீ பல பாத்திரங்களை வகிக்கிறது. எங்கள் முக்கிய மூலோபாய தூண்களாவன் தற்போதுள்ள ஏற்றுமதியாளர்களை அவர்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு உதவுதல்இ தற்போதைய இலங்கை ஏற்றுமதி தொகுதிகளை மாற்றுவதற்காக இலங்கையிலிருந்து புதிய ஏற்றுமதியை ஊக்குவித்தல்இ புதிய சந்தைகளாகப் பன்முகப்படுத்துதல்இ திறனை வளர்த்தல் மற்றும் ஏற்றுமதி சார் அந்நிய முதலீட்டை நாட்டிற்கு உருவாக்குதல்.

இந்த புதிய முயற்சிகள் நாட்டிற்கு இலக்கு வைக்கப்பட்ட அந்நிய செலாவணி வருவாயை அடைவதற்கான எங்கள் முயற்சிகளை எவ்வாறு துரிதப்படுத்துகிறோம் என்பதை நிரூபிக்கின்றன.

நுனுடீ இன் பணிப்பாளர்கள் சபைக்கு அவர்களின் மதிப்புமிக்க பங்களிப்புகளுக்காக எனது பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன் மற்றும் அனைத்து தாப்பினரின் ஆதரவிற்கும் நன்றி தெரிவிக்கிறேன். அமைப்பின் இலக்கை அடைய நுனுடீ இன் முகாமைத்துவம் மற்றும் பணியாளர்களுக்கும் அவர்களின் வலுவான பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்

ஏற்றுமதித் துறை இப்போது இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறையாக மாறியுள்ளது மற்றும் நாங்கள் தொடர்ந்து முடிவுகளை வழங்குவதுடன் சர்வதேச வர்த்தக அரங்கில் புதிய உயர்வுகளை அடைவதற்கு இன்னும் ஒரு வருடத்தை எதிர்பார்க்கிறோம்.

பிரபாஷ் சுபசிங்ஹ

தலைவர்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

பணிப்பாளர்கள் சபை - 2019

			முதல்	வரை
1.	**திருமதி. இந்திரா மல்வத்த**	தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்		18-11-2019
2.	**திரு. பிரபாஷ் சுபசிங்ஹ**	தலைவர்	18.12.2019	
3.	**திரு. பிரபாஷ் சுபசிங்ஹ**	உறுப்பினர்	24-01-2019	2019-நவம்பர்
4.	**திரு. ஜீவன் ஞானம்**	உறுப்பினர்	24-01-2019	2019-நவம்பர்
5.	**திருமதி. ஷியாமலீ விக்ரமசிங்ஹ**	உறுப்பினர்	24-01-2019	2019-நவம்பர்
6.	**கலாநிதி. யூஸுப் மரிக்கார்**	உறுப்பினர்	24-01-2019	2019-நவம்பர்
7.	**அனுஷ்கா விஜேசிங்ஹ** அபிவிருத்தித் உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு	உறுப்பினர்	24-01-2019	2019-நவம்பர்
8.	**திரு. துஷார ஹேரத்** பிரதி அமைச்சரின் அலுவலகம், அபிவிருத்தித் உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு	உறுப்பினர்	24-01-2019	2019-நவம்பர்
9.	**கலாநிதி. ஹர்ஷ சுபசிங்ஹ** (சபை உறுப்பினர், முதலீட்டுச் சபை) தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்	உறுப்பினர்	14-10-2019	2019-நவம்பர்
10.	**திரு. டீ.வீ. பந்துலசேன** செயலாளர் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு	உறுப்பினர்	28-02-2019	2019-நவம்பர்
11.	**திருமதி. கே.என். குமாரி சோமரத்ன** மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு	உறுப்பினர்	11-02-2019	2019-நவம்பர்
12.	**திரு. டப்ளியு.ஏ.டீ.எஸ். குணசிங்ஹ** மேலதிகச் செயலாளர் அபிவிருத்தித் உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு	உறுப்பினர்		2019-நவம்பர்
13	**திருமதி. டப்ளியு.எம்.ரீ.டீ. விக்ரமசிங்ஹ** மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு	உறுப்பினர்	28-02-2019	2019-நவம்பர்

			முதல்	வரை
14	**திரு. என்.ஜீ. பண்டிதரத்ன** மேலதிக செயலாளர் (விசேட கருத்திட்டங்கள்) கைத்தொழில் மற்றும் வர்த்தகம், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு	உறுப்பினர்	18-02-2019	2019-நவம்பர்
15	**திருமதி. சரோஜா சிறிசேன** பணிப்பாளர் நாயகம் (பொருளாதார அலுவல்கள்) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு **திரு. பீ. மொஹிடீன் அம்ஸா** மேலதிகச் செயலாளர் (பொருளாதார அலுவல்கள்) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு	உறுப்பினர்	30-01-2019	2019-நவம்பர்
16	**திரு. பீ.எச்.ஏ.எஸ். விஜேரத்ன** மேலதிக பணிப்பாளர் நாயகம் பொது தொழில் முயற்சிகள் திணைக்களம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு	உறுப்பினர்	28-02-2019	2019-நவம்பர்
17	**திரு. பீ. செந்தில்நந்தனன்** மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புணரமைப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் விருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு	உறுப்பினர்	04-04-2019	2019 -நவம்பர்


சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியினர் 2019

1	தலைவர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்	திருமதி. இந்திரா மல்வத்த ஜ18.11.2019 வரைஸ
	தலைவர்	திரு. பிரபாஷ் சுபசிங்ஹ ஜ18.12.2019 முதல்ஸ
2	பணிப்பாளர் நாயகம்	திருமதி. ஜீவனி சிறிவர்தன
3	மேலதிக பணிப்பாளர் நாயகம் – அபிவிருத்தி	திரு. தம்மிக ஜயவர்தன ஜ06.03.2019 வரைஸ
	பதில் மேலதிக பணிப்பாளர் நாயகம் – அபிவிருத்தி	திருமதி. சித்ராஞ்சலீ திஸாநாயக்க
4	பதில் மேலதிக பணிப்பாளர் நாயகம்- நிதி மற்றும் நிர்வாகம்	திரு. எம்.கே.எஸ்.கே. மல்தெனி
5	பணிப்பாளர் – கைத்தொழில் உற்பத்திகள்	திருமதி. சித்ராஞ்சலீ திஸாநாயக்க
6	பணிப்பாளர் – ஏற்றுமதி சேவைகள்	திரு. எம்.கே.எஸ்.கே. மல்தெனி
7	பணிப்பாளர் – சந்தை அபிவிருத்தி	திருமதி. அனோமா பிரேமதிலக
8	பணிப்பாளர் – பிராந்திய அபிவிருத்தி	திருமதி. அனோமா கரலியத்த ஜ01.11.2019 வரைஸ
	பதில் பணிப்பாளர் - பிராந்திய அபிவிருத்தி	திரு. எஸ்.ஆர்.பீ.இந்ரகீர்த்தி ஜ15.11.2019 முதல்ஸ
9	பணிப்பாளர் – ஏற்றுமதி விவசாயம்	திருமதி. மாலனி பெத்தெகமகே
10	பணிப்பாளர் – நிதி	திருமதி. ஜீ.எம். ஹேரத்
11	பணிப்பாளர் – மனிதவள முகாமைத்துவம்	திரு. கே.கே. ருவான் கன்னங்கர
12	பணிப்பாளர் - கொள்கை மற்றும் உபாய திட்டமிடல்	திருமதி. தயானி வெகபிட்டிய ஜ15.05.2019 வரைஸ
	பதில் பணிப்பாளர் - கொள்கை மற்றும் உபாய திட்டமிடல்	திருமதி. அச்சினி வீரவர்தன ஜ21.05.2019 முதல்ஸ
13	பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம்	திருமதி. இந்து அலஹப்பெரும
14	பணிப்பாளர் - வர்த்தக வசதியளித்தல் மற்றும் வர்த்தக தகவல்	திரு. எஸ்.ஆர்.பீ.இந்ரகீர்த்தி
15	உள்ளகக் கணக்காய்வாளர்	திருமதி. நில்மினி ரணசிங்ஹ
16	சட்ட உத்தியோகத்தர்	திருமதி. டீ.ரீ. விஜேரத்ன
17	கணக்காய்வாளர்கள்	கணக்காய்வாளர் நாயகம்
18	வங்கியாளர்கள்	இலங்கை வங்கி சம்பத் வங்கி தேசிய அபிவிருத்தி வங்கி

<u>பதிவு செய்யப்பட்ட அலுவலகம்</u>
இல, 42 நவம் மாவத்தை,
கொழும்பு 02

ஏற்றுமதி செயல்திறன் 2019


இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றுகை 2019



வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதிகளின் முக்கிய ஏற்றுமதி நாடுகள்

முதல் 5 ஏற்றுமதி நாடுகள் - ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மன் மற்றும் இத்தாலி -

இந்நாடுகள் இலங்கை வர்த்தகப் பொருட்களின் 50 % இற்கு மேலான ஏற்றுமதிகளுக்குக் கணக்குக் கூறுகின்றன.




ஏற்றுமதி வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பாளர்கள்

- வுணிக பொருட்களாக மொத்த ஏற்றுமதி 2019 ஆம் ஆண்டில் 0.42% ஆல் 11.9 பில்லியன்களாக அதிகரித்தது.
- ஐ.சி.ரி/ விபிளம் சேவைகளின் ஏற்றுமதி 2019 ஆம் ஆண்டில் 5.22% ஆல் 1.1 பில்லியன்களாக அதிகரித்தது.

வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதிகளின் பிரதான துறைகள்

ஆடை



46.8 %

தேயிலை



11.3 %

இறப்பர் உற்பத்திகள்



7.5 %

தெங்கு உற்பத்திகள்



3.8 %


உணவு மற்றும் குடிபானங்கள்



2.7 %

சேவை ஏற்றுமதிகளின் பிரதான துறைகள் (ஐ.அ.டொலர் பில்லியன்களில்)

துறை	2018	2019	% வளர்ச்சி
ஐ.சி.ரி/ விபிளம	1,035	1089	**5.22**
நிர்மாணம்	65	67	**3.08**
நிதிச் சேவைகள்	242	213	**-11.98**
போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை	2,486	2,339	**-5.91**
உடல் நலச் சுற்றுலா	193	180	**-6.74**
மொத்த சேவை ஏற்றுமதிகள்	**4,021**	**3,828**	**-0.52**




மூலம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

வுணிக பொருட்களின் ஏற்றுமதியிலிருந்து 2019 ஆம் ஆண்டில் இலங்கையின அந்நிய் செலாவணி வருவாய் 0.42% ஆல் அதிகரித்து 11.94 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியுள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் 11.89 பிலியன் அமெரிக்க டாலர்களுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டில் ஏற்றுமதியில் அதிதரிப்பை பதிவு செய்ததுள்ளது. மிகப்பெரிய பங்களிப்பாளரான, ஆடை ஏற்றுமதி 2019 ஆம் ஆண்டில் 5,557 மில்லியன் அமெரிக்கடாலர்களாக அதிகரித்துள்ளது, இது 2018 இல்பதிவு செய்யப்பட்ட 5,300 மில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 5.24% ஆல் அதிகரித்துள்ளது.

ஐ.சி.ரி/விபிஎம (5.22%) மற்றும் கட்டுமானம் (3.08%) தவிர, நிதி சேவைகள, போக்குவரத்து மற்றும் பொருட்களை கையாளுதல்மற்றும் ஆரோக்கிய சுற்றுலா துறைகளின் சேவை ஏற்றுமதியில் முறையே 11.98%, 5.91% மற்றும் 6.74% ஆல் குறைந்துள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலால் ஆரோக்கிய சுற்றுலாத்துறை மிகவும் பாதிக்கப்படுள்ளது.

மாதாந்த வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2017 – 2019



	ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்
2017	864.7	867.8	1,041	794.7	841.2	987.3	1,015	1,000	1,011	975.6	940.9	1,019
2018	965.4	915.7	1,107	795.1	923.8	1,024	1,073	1,037	1,055	979.0	980.0	1,025
2019	1,038	981.1	1,136	798.1	961.0	1,084	998.5	1,033	952.1	977.3	978.8	1,000

மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கைச் சுங்கம்,

பிரதான 20 ஏற்றுமதி நாடுகள்

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலுள்ள ஏற்றுமதிகளின் ஒப்பீட்டை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. பெரும்பாலும் இலங்கையின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளில் 78% மானவை பிரதான 20 ஏற்றுமதி நாடுகளை மையமாகக் கொண்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா தனி ஏற்றுமதி நாடாக மொத்த ஏற்றுமதியில் 26% சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

	நாடு	2018 ஐ.அ.டொ. மில்.	2019 ஐ.அ.டொ. மில்.	% வளர்ச்சி	2019 இல் ஏற்றுமதிகளின் பகிர்வு (%)
1.	ஐக்கிய அமெரிக்கா	3,076	3,139	2.07	26.37
2.	ஐக்கிய இராச்சியம்	982	998	1.64	8.38
3.	இந்தியா	768	759	-1.12	6.37
4.	ஜேர்மனி	612	646	5.45	5.42
5.	இத்தாலி	577	531	-7.95	4.46
6.	பெல்ஜியம்	359	352	-1.97	2.96
7.	நெதர்லாந்து	257	301	17.00	2.53
8.	ஜப்பான்	225	282	25.22	2.37
9.	ஐக்கிய அரபு எமிரேட்	290	275	-5.07	2.31
10.	கனடா	210	240	14.57	2.02
11.	சீனா	231	229	-0.66	1.92

	நாடு	2018 ஐ.அ.டொ. மில்.	2019 ஐ.அ.டொ. மில்.	% வளர்ச்சி	2019 இல் ஏற்றுமதிகளின் பகிர்வு (%)
12.	துருக்கி	219	210	-4.12	1.76
13.	அவுஸ்திரேலியா	192	200	3.92	1.68
14.	பிரான்ஸ்	197	193	-2.34	1.62
15.	ரஷ்யா	186	167	-10.15	1.40
16.	ஹொங்கொங்	172	167	-3.29	1.40
17.	பங்களாதேஷ்	135	162	19.57	1.36
18.	மெக்ஸிகோ	176	160	-8.95	1.35
19.	ஈராக்	145	126	-13.18	1.06
20.	சுவிட்ஸலாந்து	131	120	-8.48	1.01
	உப மொத்தம்	**9,140**	**9,257**	**1.28**	**77.75**
	ஏனையவை	2,749	2,683	-3.65	22.19
	மொத்தம்	**11,890**	**11,940**	**0.42**	**100.00**

ஏற்றுமதிப் பிராந்தியம்

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலுள்ள ஏற்றுமதிகளின் ஒப்பீட்டை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளில் 30% திற்கு பங்களிப்புச் செய்துள்ள அதேவேளையில், ஐக்கிய அமெரிக்கா மொத்த ஏற்றுமதிகளில் 26.37 % சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

	பிராந்தியம்	2018 ஐ.அ.டொ. மில்.	2019 ஐ.அ.டொ. மில்.	% வளர்ச்சி	2019 இல் மொத்த ஏற்றுமதிகளின் பகிர்வு (%)
1.	ஐரோப்பிய ஒன்றியம்	3,490	3,549	1.68	29.81
2.	வட அமெரிக்கா	3,461.92	3,540.42	2.27	29.65
3.	தென் அமெரிக்கா	229.85	209.55	-8.83	1.76
4.	ஆசியா	1,726.77	1,812.94	4.99	15.18
5.	சுதந்திரம் பெற்ற பொதுநலவாய	290	275	-5.17	2.30
6.	ஆபிரிக்க நாடுகள்	250	258	3.20	2.16
7.	பசுபிக் நாடுகள்	218	226	3.67	1.89
	ஏனையவை	2,223	2,069	-6.94	17.33
	மொத்தம்	**11,890**	**11,940**	**0.42**	**100.00**

தேசிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்

1) சந்தை அணுகுகை உதவித் திட்டம்

உள்நாட்டு கம்பனிகளுக்கு உலகளாவிய மதிப்பு சங்கிலியிலும் பார்க்க அணுகுகையொன்றை வழங்குவதற்கும் ஏற்றுமதிச் சந்தையில் சிறந்த போட்டிக்குரியதாக இருப்பதற்கும் துணை நிற்கக்கூடிய வர்த்தக சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக 2018 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சந்தை அணுகுகை உதவித் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம், தமது சந்தைகளை விரிவுபடுத்தல், சந்தை அணுகுகையை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தலை மேம்படுத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், சர்வதேச நிலைமை, சூழல் மற்றும் ஏனைய தரங்களுக்கு இணங்கியதாக உள்நாட்டில் உருவாகியுள்ள வர்த்தக நாமத்தை மேம்படுத்தல், தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு ஆர்வத்தை காட்டுகின்ற வியாபாரங்களை ஊக்குவித்தல் என்பனவாகும். கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழுள்ள ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனமாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் இரண்டு வகுதிகளின் கீழ் தொழிற்படுகின்றது.

வகுதி 1: ஆறு மாத காலத்திற்குள் பூர்த்திசெய்யப்படவுள்ள கருத்திட்டங்களுக்கு/ செயற்பாடுகளுக்கு அதிகபட்சமாக ரூபா 1.0 மில்லியன் வரை உதவியளித்தல்.

வகுதி 2: 1 - 2 வருடங்களுக்குள் பூர்த்திசெய்யப்படவுள்ள கருத்திட்டங்களுக்கு/ செயற்பாடுகளுக்கு ரூபா 1.0 மில்லியனிற்கு மேற்பட்டதும் அதிகபட்சமாக ரூபா 5.0 மில்லியன் வரை உதவியளித்தல்.

இந்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டினுள் 262 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளையில் இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள், அலங்கார மீன்கள், பாதணிகள் மற்றும் இலகுரக பொறியிகள், தென்னை மற்றும் தென்னை சார்ந்த தும்பு அடிப்படையிலான உற்பத்திகள், மீன்பிடி உற்பத்திகள், ஆடைகள், வாசணைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், மர உற்பத்திகள், வள்ளம் கட்டுதல், ICT and BPM, அச்சிடல் மற்றும் வழங்கல் சேவை, பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற உற்பத்தித் துறைகள் பலவற்றை உள்ளடக்கியதாக 108 விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயந்திரங்களை கொள்வனவு செய்தல், பக்டீரியா தடுப்பு வசதிகளை ஸ்தாபித்தல், தர மேம்பாடு, திறன் விருத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி, barcode முறையை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்கான செலவுகளை பரிமாற்றிக் கொள்ளும் அடிப்படையில் உதவி வழங்கப்படுகின்றது.

வகுதி	அனுமதிக்கப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை	நிதியுதவி கிடைத்துள்ள கம்பனிகளின் எண்ணிக்கை
1	42	29
2	76	45

2) தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பு

தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பின் மூலம் இலங்கையில் ICT/BPM துறையை அபிவிருத்தி செய்தல் அதேபோன்று கம்பனிகளுக்கு அடுத்த கட்டம் வரையிலான வளர்ச்சி, இலங்கையின் ICT/BPM நிலை மற்றும் ஆற்றல்கள் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தல் மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற கேள்விகளுக்கு ஏற்ற பயிற்சிபெற்ற ஊழியர் படையொன்றை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு உதவியளிக்கின்றது. இதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் 5 பில்லியன் இலக்கை அடைந்து கொள்வதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

துறையின் விஷேட கம்பனி (ஆலோசனை கம்பனி) STAX Inc. - ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் இருக்கக்கூடிய வெற்றியாளர்களை உருவாக்குதல், டிஜிட்டல் மற்றும் டிஜிட்டல் அல்லாத வர்த்தக பெயரின் உப முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்துகின்றது.

- **"வெற்றியாளர்களை கட்டியெழுப்புவதற்கான முன்னெடுப்பு"** என்பது ரூபா 3.5 மில்லியன் அதிகபட்ச தொகைக்கு உட்பட்டு ICT/BPM கம்பனிக்காக உதவுகின்ற மானியமாகும். இதன் கீழ் 33 கம்பனிகள் விண்ணப்பங்களை அனுப்பியிருந்த அதேவேளையில், அதில் 20 கம்பனிகள் கவனத்திற் கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதனிடையே 14 தொழில்முயற்சிகள் ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வங்கி பாதுகாப்பினை சமர்ப்பித்ததன் பின்னர் சகல கம்பனிகளுக்கும் 20% முன்கொடுப்பனவு அதிகபட்சமாக ரூபா 0.7 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. மூன்று கம்பனிகள் அவர்களின் சகல செயற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளன.

- **டிஜிட்டல் வர்த்தகப் பெயர் முன்னெடுப்புகள்** - இலங்கையை அறிவு சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான இலக்கு நாடாக மாற்றுவதில் இந்நாட்டு சந்தை இலக்குகளை ஊக்குவிப்பதற்காக இலங்கை ICT/BPM வர்த்தகப் பெயர் (IOI – Island of Ingenuity) மேம்படுத்தும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடுகின்றன.

  Burgundy and Redhil ஆலோசனை கம்பனியுடன் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ஸ்கண்ட்னேவிய நாடுகள் போன்ற இலக்கு வைக்கப்பட்ட சந்தைகளுக்கு இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். ஒரு வருட காலத்திற்கான உடன்படிக்கை 2019 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

- **டிஜிட்டல் அல்லாத வர்த்தகப் பெயருக்கான முன்னெடுப்புகள்**

  - டுபாயில் ஒக்டோபர் 6-10 வரை இடம்பெற்ற GITEX 2019 - மத்தியகிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்திற்கான ஆறு (6) கம்பனிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் பெறுபேறாக 2020 ஆம் ஆண்டளவில் ஐ.அ. டொலர் 3.0 மில்லியன் பெறுமதியைக் கொண்ட வியாபாரம் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக நிகழ்ச்சித்திட்டத்தின் போது கூட்டு வியாபாரத்திற்காக 50 இற்கு மேற்பட்ட கோரிக்கைகளும் சுமார் 300 ஆர்வத்தை வெளிப்படுத்துபவர்களும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன.
  - அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஒக்டோபர் 29-31வரை நடைபெற்ற CEBIT 2019 - இதில் 10 கம்பனிகள் பங்குபற்றின.
  - இந் நாட்டின் நிலைப்படுத்தல் அறிக்கையென்பது இலங்கை உலகளாவிய சேவைகள் அமைவிட சுட்டி (GSLI) போன்ற சுட்டிகளில் நம்பகமான ICT/BPM இடமாக ஏற்றுக்கொள்வதற்கு உட்படுகின்றமை மற்றும் இலங்கையில் போட்டித் தன்மைக்குரிய சாதகங்கள் பற்றி முதலீட்டாளர்களை நம்பவைப்பதற்குமான போட்டிக்குரிய ஆய்வாகும். ஆலோசணை கம்பனிகளிடமிருந்து ஐந்து (05) முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
  - OI வர்த்தகப் பெயரை மேம்படுத்துவதற்காக 04 ஓடியோ காட்சி (AVs) நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றின் இறுதியான பதிப்பு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்

வெளியிடப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களினால் அவர்களது மேம்படுத்தல் பணிக்காக இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

- இலங்கையில் ICT/BPM துறையில் உள்ள ஆற்றல்களை எடுத்துக்காட்டி மேலும் நாட்டைப் பற்றிய 01 சிறுநூல் உருவாக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜப்பானில் இடம்பெற்ற தகவல் தொழிநுட்ப வாரத்தின் போதும் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற GITEX கண்காட்சியின் போதும் இந்த சிறுநூல் விநியோகிக்கப்பட்டன.

- **திறன் விருத்தி முன்னெடுப்புகள்**

பிராந்தியத்தில் ICT/BPM தொழில் முயற்சியாளர்களுக்காக உள்ள உலகளாவிய வாய்ப்புக்கள் பற்றிய விளக்கமளித்தல் மற்றும் அவர்களின் அடுத்த மட்டம் வரையிலான வளர்ச்சிக்காக உதவுவதற்கு கருத்தரங்கு மற்றும் வியாபார வழிகாட்டல்கள் தொடர்ந்து நடாத்தப்பட்டன. இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் 20 முதல் 21 வரை ஊவா தகவல் தொழிநுட்ப வாரம் 2019 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கிடையே IOI வர்த்தக பெயரை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் மேம்பாட்டுக்காக வர்த்தகப் பெயரைப் பயன்படுத்திக்கொள்ளுதல் பற்றிய விளக்கமளித்தல். இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக ICT/BPM வியாபாரத்தை ஆரம்பிப்பவர்களுக்காக அரசாங்கத்தினால் குத்தகை வாடகையில் 50% நிவாரணம் வழங்கப்படுகின்றபடியினால் அவர்களுக்குத் தேவையான வேலைச் சூழலை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆரம்ப நிலையத்திற்காக அவர்களின் குத்தகை வாடகைச் செலவில் 50% கிடைக்கும். தற்போது நிதி உதவிக்கான 05 நிலையங்கள் விண்ணப்பித்துள்ள அதேவேளையில், ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அந்த விண்ணப்பங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

பல்கலைலக்கழக பாடநெறிகளுக்காக குறுகிய கால கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தல் - அதன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களினூடாக தகவல் தொழிநுட்ப தொழிலாளர்களுக்கு சந்தை கேள்வி உள்ள தகவல் தொழிநுட்ப தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்காக புதிய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- கொழும்பு பல்கைலக்கழகத்தினால் 29 மாணவர்களுக்கான தரவு விஞ்ஞான கற்கைநெறி ஒன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளையில், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் தொகுதிக்காக 37 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
- SLIIT நிறுவனத்தினால் 09 மாணவர்களுக்காக 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் Internet of things கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் தரவு பகுப்பாய்வு கற்கை நெறியொன்று நடாத்தப்படவுள்ளது - வரவு செலவுத் திட்ட முன்மொழிகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் கற்கைநெறி கட்டத்தில் 50% நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

3) வள்ளம் கட்டுதல் - உட்கட்டமைப்பு வசதிகளை ஸ்தாபித்தல் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்தல்

ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்தல்.

நாட்டில் வள்ளம் தயாரிப்பு கைத்தொழில், படகுப் பயணம் மற்றும் கடற்படை செயற்பாடுகள் ஆகியவற்றை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் இலங்கையின் கடலுக்கு மென்மேலும் வெளிநாட்டு படகுகளை கவர்ந்தீர்த்தல் ஆகியவற்றுக்காக கூடுதலான படகுகளையும் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற செயற்பாடுகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் மேலதிகமாக, படகுகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தலுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சினதும் வர்த்தக கப்பற் துறை செயலகம் மற்றும் ஏனைய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களினதும் பங்குபற்றலுடன் கைத்தொழிலின் மொத்த மதிப்புச்

சங்கிலியை (மீன்பிடிப் படகு தவிர்ந்த) உள்ளடக்கியதாக ஒழுங்குமுறை கட்டமைப்பு ஒன்று மேம்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பு வரத்தக கப்பற்துறை செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தொலைபேசி தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு ஆகியவற்றினால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகளை ஸ்தாபித்தல்

வள்ளங்களை தயாரிக்கும் (விஷேடமாக 20 மீற்றருக்கு மேற்பட்ட வள்ளங்கள்) நிறுத்தி வைத்தல் (நங்கூரத் தளங்கள்/ தங்குமிடத் துறைகள்) ஆரம்பித்தல் மற்றும் பரிசீலணை செய்தல். (சறுக்கல் வழி/ ஆரம்பிக்கும் இடம்) மற்றும் பழுதுபார்த்தலுக்காக தடாக வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையின் காரணமாக படகுகளை செலுத்துதல்/ கடற்படை நடவடிக்கைகள் என்பன மிதமான வேகத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வள்ளத் தயாரிப்புக்காக வள்ளங்களை நிறுத்தி வைத்தல், ஆரம்பித்தல் மற்றும் பரிசீலனை செய்தல் வசதிகளை வழங்குவதற்கு நீர்வெட்டு ஒன்றை நிர்மாணித்தல் ஆகியவற்றுக்குப் பொருத்தமான இடமாக கப்பரத்தொட்ட (வெலிகம) அடையாளங் காணப்பட்டுள்ளது. சூழல் அறிக்கை தவிர்ந்த முன்சாத்தியவள அறிக்கை, சாத்தியவள அறிக்கை மற்றும் விபரமான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கரையோர பாதுகாப்பு திட்டணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேடல் நியதிகளுக்கு அமைவாக சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய அதேவேளை, ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காலம் செல்லும். கருத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கு வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை ஒதுக்கிக்கொள்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கூட்டு அமச்சரவை விஞ்ஞாபனத்தின் வரைபும் தயாரிக்கப்பட்டுள்ளது.

4) பல்தேசிய கூட்டுறவு வெளிக்கள நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை இலத்திரனியல் மற்றும் மின்னியல் கம்பனிகளுக்கு உலகளாவிய பல்தேசிய கூட்டுறவு வழங்கல் வலையமைப்புடன் தொடர்புபடுவதற்கும் கூட்டுவியாபரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இலங்கையின் நிர்மாணத்தின் அடிப்படையில் தங்கியிருக்கின்ற பணிகளில் ஒப்பத்தம் செய்யப்பட்ட தயாரிப்பாளர்களாக ஈடுபடக்கூடிய விதத்தில் G2G அல்லது G2B நிகக்ழ்ச்சித் திட்டங்களினூடாக இலங்கைக்கு 3 முதல் 5 வரையான பல்தேசிய உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்னியல் கம்பனிகளைக் கவர்ந்தீர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் இந் நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2019.02.05 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக, வெளிநாட்டு ஆலோசகர்களின் சேவையை பெற்றுக்கொள்ளாமல் பல்தேசிய கூட்டுறவு வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் முதலீட்டு சபைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக PricewaterhouseCoopers (PwC Sri Lanka) நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக பெறுகை அலகின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

5) வர்த்தக மேடையொன்றை ஸ்தாபித்தல்

இலங்கையின் உற்பத்தி மற்றும் சேவைகளை சர்வதேச ரீதியாக ஒரே மேடையில் மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கையின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற வாங்குனர்கள் மற்றும் தற்போதுள்ள வாங்குனர்களுக்கு அதற்கான வசதிகளை வழங்குவதற்கு இலங்கையில் தொழில்முயற்சியாளர்களுக்கு உரிய சந்தைத் தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதற்காக வர்த்தக மேம்பாட்டு மேடையொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சித் துறையின் மேம்பாட்டுக்காக இலங்கை உற்பத்திகளை நிகழ்நிலை மூலம் விற்பனை செய்வதற்கும் B2B சீராக்கம் என்பவற்றுக்கும் வசதிகளை வழங்குவதற்கு

இந்த மேடையில் E-MARKETPLACE கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் பிரதான வழியலகுகள் பலவற்றினூடாக வெளிநாட்டு வாங்குனர்களினால் சாத்தியமுள்ள வர்த்தக பங்காளர்களைத் தேடிக் கொள்வதற்கும் அடையாளங் காணுவதற்கும் வசதிகள் வழங்கப்படுகின்றது. சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயன்படுத்துனர்களுக்கு ஏற்றுமதியாளர்கள் மற்றும் வாங்குனர்கள் பற்றிய விபரங்களை தேடிப்பார்க்கும் காரணிகளுக்கு பதிலுரைக்கும் விதமாக அவர்கள் ஆர்வத்தை காட்டுகின்ற விடயங்கள் பற்றிய தகவல்கள் இந்த இணையதளத்தில் உள்ளடங்கியுள்ளன. QCBS பெறுகை செயற்பாட்டினூடாக hosting மற்றும் e - மேம்பாட்டிற்காக சேவை வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தற்போது web portal ஐ நிர்மானிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது.

6) இலங்கை கம்பனிகளுக்கு இந்திய மற்றும் சீன சந்தைகளில் பிரவேசிப்பதற்கு உதவியளித்தல் (வர்த்தக இல்லங்களை ஸ்தாபித்தல்)

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது தனியார் துறை மற்றும் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுடன் கலந்துரையாடி பின்வரும் இரண்டு சாளரங்களின் கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளது.

i. அடையாளங் காணப்பட்ட இலங்கை ஏற்றுமதி உற்பத்திகளுக்காக சீன சந்தை நுழைவு உபாய திட்டத்தை தயாரித்தல் மற்றும் சீனாவுக்கான ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காக வியாபார தொடர்புகளை ஏற்படுத்துதல்.

ii. 'இந்திய சந்தை நுழைவு கற்கை' மேம்படுத்தவதற்கும் இலங்கை வியாபாரத்தை இந்தியா வரை கொண்டு செல்வதற்கும் வியாபார தொடர்புகளை ஏற்படுத்துதல்.

இந்த நிகழ்ச்சி திட்டங்களின் விஷேட நோக்கங்கள் பின்வருமாறு:

- சீனா மற்றும் இந்திய சந்தைகளுக்கு நுழையும் சாத்தியத் தன்மையுள்ள இலங்கையர்களின் பிரயோசனத்திற்காக பிரதான துறைகளை உள்ளடக்கிய அறிவிக்கப்பட்ட மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட கற்கையை மேற்கொள்ளுதல்.
- இலங்கை கம்பனிகளுக்கு சீன மற்றும் இந்திய சந்தைகளுக்கு நுழைவதற்கான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

சீன கற்கையின் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் பற்றி மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பெறுகைக் குழுவின் ஆலோசணை எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய கற்கையின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு 06 கம்பனிகள் மூலம் கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகளுக்காக புள்ளிகளை வழங்கும் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றது.

7) தனியார் துறையினால் டயர்களை பரீட்சித்து விருத்தி செய்யும் ஆய்வு வசதிகளை ஸ்தாபிப்பதற்காக வசதியளித்தல்.

டயர்களை பரீட்சித்தல் மற்றும் ஒரே அச்சுக்களை நிர்மானித்தல் ஆகியவற்றிற்காக முழுமையான ஆய்வு வசதிகளை ஸ்தாபிப்பது பற்றிய முன்மொழிவு 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டத்திற்காக அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கு 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 50 மில்லியன் ஆரம்ப வரவு செலவு ஏற்பாடொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் வருகின்ற இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் இறப்பர் கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்தின் பொறுப்புக் கூறக்கூடிய நிறுவனமாக இருக்கின்ற அதேவேளையில், அதில் ஏற்கனவே இறப்பர் தொழிநுட்ப நிபுணர்கள் பலர் பயிற்றுவிக்கப்படடுள்ளபடியினாலும் அது இறப்பர் கைத்தொழிலுக்குத் தேவையான அடிப்படை ஆய்வு

வசதிகளை கொண்டுள்ளபடியினாலும் இந்த நிலையத்தை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஸ்தாபிக்க தீர்மினிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், வருடத்தில் மேற்கொள்வதற்காக பின்வரும் செயற்பாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

(i) உயர்மட்ட டயர் ஆய்வு உபகரணங்களையும் பொலிமர் நூலக மென்பொருளையும் கொள்வனவு செய்தல்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட தேவைகளுக்கு இணங்குவதற்காக தற்போது காணப்படுகின்ற ஆய்வு கூடங்களின் உடகட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

(iii) ஆய்வு கூடங்களை அங்கீகரிப்பதற்காக வெளியிலிருந்து ஆலோசணை சேவைகளை வழங்குதல்.

சூழல் மற்றும் சுகாதார காரணிகள் பற்றிய கவனம் அதிகரிக்கின்றபடியினால் அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றில் டயர் கைத்தொழில் உற்பத்தி உட்பட இறப்பர் உற்பத்திகளை தயாரிக்கும் கைத்தொழிலில் பயன்படுத்துகின்ற இரசாயன பொருட்களின் பயன்பாடு பற்றி பல்வேறு சட்டங்களையும் வரையறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. (உதாரணமாக இரசாயனப் பொருட்களை பயன்படுத்தல், மதிப்பீடு செய்தல், அதிகாரமளித்தல் மற்றும் வரையறை செய்தல் - 69 ஆவது முன்மொழிவு) அதனால் சர்வதேச சந்தைகளில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றவாறு தேவையான தரச் சான்றிதழை வழங்குவதற்காக இந்த பரிசோதனை ஆய்வு கூடங்களை அங்கீகரித்துக் கொள்வதும் அதன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக ஆற்றல்களையும் வசதிகளையும் மேம்மடுத்துவதும் அத்தியாவசியமாகும். இருப்பினும் இந்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு கூடங்கள் இலங்கையில் இல்லாத அதேவேளையில் கைத்தொழிலுக்கு வெளிநாட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பரீசீலனைகளை மேற்கொள்ளும் வசதிகளின் மீது தங்கியிருக்க வேண்டி ஏற்படுகின்றது.

வெளிநாட்டுகளின் மூலம் இந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொழிநுட்ப ஆற்றல்கள் அல்லது நிதி ரீதியான சக்திகள் இல்லாத சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறைக்கு அவர்களின் உற்பத்திகளின் தரத்தை அதிகரிக்கும் போது உயர் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ள உற்பத்திகளை நோக்கி செல்லும் போது ஏற்படுகின்ற தடைகளின் காரணமாக சர்வதேச சந்தைகளில் போட்டியிடுவது சிரமமாக உள்ளது.

இந்த கருத்திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்ற வசதிகளின் மூலம் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியாளர்களுக்குரிய தேவைகளை பரீசீலணை செய்வதற்காக செலவாகின்ற அந்நிய செலாவனியை குறைத்தல், அதேபோன்று அவர்களுக்கு உலகளாவிய சந்தைகளில் சிறந்த போட்டியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்த வசதிகளை பயன்படுத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதன் மூலம் உலகளாவிய சந்தையில் தங்கியிருப்பதற்கு அல்லது இறப்பர் சந்தையில் பங்குகளை அதிகரிப்பதற்கு வழி சமைத்து மிகவும் உயர்தர குறைந்த செலவைக்கொண்ட புதிய அல்லது உயர் கேள்விகையைக் கொண்ட உற்பத்திகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தற்போது ஆய்வுகூட உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தி மற்றும் ஆலோசணை சேவைகளை வழங்குவதற்காக கிடைக்கப் பெற்றுள்ள விலைகள் மதிப்பீடு செய்து DPC (minor) தொழிநுட்ப குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளை அதனை வழங்குவதற்கான கடிதத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காலத்தினுள் ஆய்வுகூட தரங்களுக்கு இணங்கியதாக ஆய்வுகூட உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. உபகரணங்கள் மற்றும் மென்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை பதவியினர்களை பயிற்சியளிக்கும் நடவடிக்கை அடுத்த வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டம்

தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தின் நோக்கு – "இலங்கையை புத்தாக்கு மற்றும் முதலீடு ஆகியவற்றின் மூலம் இயக்குகின்ற ஏற்றுமதி கேந்திர நிலையமாக மாற்றுதல்."

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும சர்வதேச வர்த்தக அமைச்சுடன் இணைந்து ICT நிறுவனத்தின் தொழிநுட்ப உதவியுடன் ஐந்து வருட (2018-2022) தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் அது 2018 ஜுலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 2022 ஆம் ஆண்டளவில் ஐ.அ. டொலர் 28 பில்லியன் ஏற்றுமதி இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஏற்றுமதி உற்பத்திகளை பல்வகைப்படுத்தல் ஆகிய நோக்கத்துடன் ICT நலன்மிக்க சுற்றுலா கைத்தொழில், வாசணைத் திரவியங்கள் மற்றும் செரிவுப் பொருட்கள், வள்ளங்கள் கட்டுதல், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள், மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் போன்ற இலக்கு வைக்கப்பட்ட ஆறு (06) துறைகள் மற்றும நான்கு வரத்தக ஆதரவுப் பணிகள் அதாவது சந்தை தகவல் மற்றும் மேம்பாடு, தேசிய தர உட்கட்டமைப்பு வசதிகள், வழங்கல் சேவை மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சித்துவம் என்பன அடையாளங் காணப்பட்டுள்ளன.

தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டம் கவனம் செலுத்தும் துறைகள் [2018-2022]

2019 தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டத் துறைகளிலிருந்து கிடைத்த 22.3 % பங்களிப்பு [2018 இல் கிடைத்த 20.8% துடன் ஒப்பிடும் போது]

சேவைகள்

வளர்ச்சியடைந்து

IT - BPM
ஐ.அ.டொ. 1,280 மில்.

[2018 ஐ.அ.டொ.1,035 மில்.]

வளர்ந்துவரும்

நல்வாழ்வுச் சுற்றுலா
ஐ.அ.டொ. 173 மில்.

[2018 ஐ.அ.டொ.193மில்.]

கைத்தொழில்

வளர்ந்துவரும்

வள்ளங்கள் கட்டுதல்
ஐ.அ.டொ. 65மில்.

[2018 ஐ.அ.டொ. 27மில்.]

வளர்ச்சியடைந்து

மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருட்கள்
ஐ.அ.டொ. 381 மில்.

[2018 ஐ.அ.டொ. 410 மில்.]

விவசாயம்

வளர்ந்துவரும்

பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள்
ஐ.அ.டொ. 442மில்.

[2018 ஐ.அ.டொ. 443மில்.]

வளர்ச்சியடைந்து

வாசணைத் திரவியங்கள் மற்றும் செரிவுப் பொருட்கள்
ஐ.அ.டொ. 313 மில்.
[2018 ஐ.அ.டொ.361மில்.]

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வசதியளித்தல்.

ஏற்றுமதியாளர்களுக்காக வியாபார சூழலொன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சர்வதேச வர்த்தக தேவைகளுக்கு அமைவாக இலங்கையில் ஏற்றுமதி தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளின் அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் சந்தைகளை அடையாளங் காணுதல், பிரவேசித்தல், மேம்படுத்துதல் மற்றும் பல்வகைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக விஷேட சேவைகளை வழங்குகின்ற அதேவேளையில் விஷேடமாக மாகாண மட்டத்தில் ஏற்றுமதி இலக்கு வைக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களின் மேம்பாட்டுக்காக வழங்கல் வலையமைப்புகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பின்வரும் தலைப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

1. **வழங்கல் மற்றும் தயாரிப்பு அபிவிருத்தி**
2. **தரம், தர நிர்னயம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல்.**
3. **சந்தை அபிவிருத்தி மற்றும் மேம்பாடு.**
4. **வர்த்தகப் பெயர் மற்றும் தயாரிப்புக்கான நிலைப்படுத்தல்.**
5. **புதிய ஏற்றுமதியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.**
6. **வர்த்தகத்திற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் தகவல்களை வழங்குதல்.**

1. வழங்கல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

1.1. வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

- **தாய்லாந்தில் இடம்பெற்ற அலங்கார மீன் கைத்தொழிலுக்கான தொழில்நுட்ப வெளிப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் (2019 ஒக்டோபர்)**

  ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மலேசியாவின் INFOFISH மற்றும் தாய்லாந்தின் மீன்பிடித் துறை திணைக்களம் என்பவருடன் இணைந்து அலங்கார மீன் வளர்ப்பாளர்களுக்கு/ ஏற்றுமதியாளர்களுக்கு தற்போது தாய்லாந்து மீன் உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக வெளிப்பாட்டு வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் தொழில்நுட்ப வெளிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்தது.
  இந்நிகழ்ச்சியில் இலங்கையிலிருந்து இருபத்தியிரண்டு (22) கம்பனிகள் பங்குபற்றிய அதேவேளையில் மூன்று நாட்கள் முழுவதும் 06 மீன் பண்ணைகளை பார்வையிட்டன. பங்கேற்பாளர்கள் புதிய பொதியிடல் தொழில்நுட்பங்கள், இனப்பெருக்க முறைகள், உணவு ஊட்டும் நுட்பங்கள், பண்ணைகளின் உயிர் பாதுகாப்பைப் பேணுதல், பண்ணை முகாமைத்துவம் மற்றும் புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு முறைகள் பற்றிய அறிவுகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

- **புதிய பால் காளான் வகையொன்றை வளர்க்கும் தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான இந்தியாவில் இடம்பெற்ற தொழில்நுட்ப பயிற்சி**

ஏற்றுமதி அபிவிருத்தி சபை நாட்டின் காளான் கைத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக காளான் வளர்ப்பவர்களுக்கு அதிகூடிய விளைச்சலைத் தரக்கூடிய புதிய காளான்கள் வகைகள் மற்றும் அதிக விளைச்சலை தரும் வித்துகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களின் உற்பத்தி வகைகளை விரிவுபடுத்துவதற்காக காளான் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் (MDTC) தொழில்நுட்ப திறன்களை விரிவுபடுத்துவதன் அவசியத்தை அடையாளம் கண்டுள்ளது.
எனவே புதுடில்லியில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை இந்தியாவின் புதுடில்லியில் உள்ள தேசிய பூங்கா ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மன்றத்தில் 04 இலங்கையர்களுக்காக தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்தது. தற்போது காளான் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தினால் பால் காளான் விதைகளின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில் அந்த உற்பத்திகள் வர்த்தகமயமாக்கப்பட்டு வருகின்றன.

1.2. உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

- **சிறிய மற்றும் நடுத்தர அளவு ஆபரண உற்பத்தியாளர்களுக்காக 03 வருட ஒருங்கிணைந்த ஆற்றலை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டம் - வடிவமைப்பு உற்பத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி (2019 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது)**

இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற இரண்டு பிரதான காரணிகள், சர்வதேச சந்தைகளுக்காக வித்தியாசமான வடிவமைப்புகளை பயன்படுத்துவதில் உள்ள நன்மைகள் பற்றிய அறிவின்மை மற்றும் சர்வதேச சந்தையில் உயர்மட்ட வர்க்கத்தினரை கவர்ந்தீர்ப்பதற்கான சிறந்த வடிவமைப்புகளை தயாரிக்கும் ஆற்றலுள்ள வடிவமைப்பாளர்கள் இல்லாமை என்பனவாகும்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2019 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவு ஆபரண உற்பத்தியாளர்களின் வடிவமைப்பு மற்றும் புதிய நுட்ப முறைகளை/ தொழில்நுட்பத்தை இற்றைப்படுத்துதல், புதிய நுட்ப முறைகளை/ தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் அறிமுகப்படுத்துதல் மற்றும் சர்வதேச ரீதியாக பயன்படுத்தப்படுகின்ற புதிய சந்தை உபாயத் திட்டங்கள் பற்றிய அறிவை மேம்படுத்துவதற்காக 10 சிறிய மற்றும் நடுத்தர அளவு உற்பத்தியாளர்களைக் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட ஒரு குழுவுக்கு 03 வருட ஒருங்கிணைந்த வடிவமைப்பு/ உற்பத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

3 கட்டங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டம் சர்வதேச மற்றும் உள்நாட்டு நிபுணர்களுடன் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. வடிவமைப்பு விருத்திசெய்தல் கட்டத்தின் போது 3 செயலமர்வுகள் நடத்தப்பட்ட அதேவேளையில், வடிவமைப்பு நிபுணர்களினால் ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் தற்போது காணப்படுகின்ற வடிவமைப்பை மேம்படுத்துவதற்காக தனித்தனியாக ஆலோசனைகள் வழங்கப்பட்ட அதேவேளையில், புதிய வடிவமைப்புகளை மேற்கொள்வதற்காக உதவி வழங்கப்பட்டது.

உற்பத்தி விருத்திசெய்யும் கட்டத்தில் (உற்பத்தி நுட்ப முறைகள்/ பொதியிடல் மற்றும் காட்சிப்படுத்துதல்) இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்ட அதேவேளையில் அதில் பங்குபற்றியவர்களுக்கு கடுவலையில் அமைந்துள்ள இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (GJRTI) அமைந்துள்ள அங்க சம்பூரணமான ஆபரண வேலைத்தளத்தில் உலோக கைவினை மற்றும் முலாம் பூசுதல் பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, புதிய ஆக்கத்திறன்மிக்க

பொதியிடல்ளுக்கு மாற்றி அமைப்பதற்காக வர்த்தக சின்னத்தைப் பெறுதல் மற்றும் பொதியிடல் பற்றிய ஒரு நாள் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்ட அதேவேளையில், அதில் அவர்களுக்கே உரித்தான வர்த்தக சின்னத்தை உருவாக்கிக் கொள்ளுதல், பல்வேறு பொதியிடல் தொழில் நுட்ப முறைகள் போன்றவை பற்றிய அறிவுகள் வழங்கப்பட்டன. பங்குபற்றுநனர்கள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்ட அதேவேளையில், புதிய வடிவமைப்புகளை சேர்த்துக் கொள்வதற்காக அவர்களுக்கே உரித்தான வர்த்தக சின்னத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவி அளிக்கப்பட்டது.

சந்தை அபிவிருத்தி கட்டம் அடுத்து வரும் 03 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளையில் ஆரம்பக் கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 10 பங்குபற்றுநர்களுக்கும் அவர்களின் புதிய வடிவமைப்பு FACETS ஆபரண தெரிவுகளை சர்வதேச இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சி -2019 இல் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் காட்சிக் கூடத்தில் காட்சிப்படுத்துவதற்கு தேவையான இடவசதிகளையும் காட்சிக் கூடத்தையும் அதேபோன்று காட்சிப் பெட்டிகள், தேவையான உபகரணங்கள் போன்ற கண்காட்சி வசதிகளை வழங்குவதன் மூலம் உதவி அளிக்கப்பட்டது.

- **NAQDA மற்றும் NARA ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அலங்கார மீன் வளர்ப்பு கைத்தொழிலுக்கான புதிய தொழில்நுட்பம் பற்றிய செயலமர்வு (2019 ஜூன் மாதம்)**

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நேரடி வெப்பமண்டல மீன் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கைத்தொழிலில் உள்ள புதிய அபிவிருத்தி பற்றி 40 அலங்கார மீன்வளர்ப்பவர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு அலங்கார மீன் கைத்தொழிலில் உள்ள புதிய மீன் வளர்ப்பு தொழில்நுட்பம், நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் நேரடி மீன் உணவு உற்பத்தி தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 03 நாள் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த மூன்று நாள் செயலமர்வின் போது, தேனி இறால் மற்றும் நியோன் டெட்ரா வளர்ப்பு தொழில்நுட்பம், மரபணு கையாளுதல், நோய் கட்டுப்பாடு, நேரடி மீன் உணவு உற்பத்தி, உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள், அலங்கார மீன் பண்ணையில் உள்ள புதிய தொழில்நுட்பம் அலங்கார மீன் பண்ணை முகாமைத்துவம் மற்றும் ஏற்றுமதிகளை சந்தைப்படுத்தல் தொடர்பான மீன் வளர்ப்பு தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டது.

- **உயிர் தாவரங்கள் மற்றும் வெட்டு பூக்களுக்கான வழங்கல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2019 ஜூலை மாதம்)**

மாகாண மட்டத்தில் தற்போதிருக்கும் ஏற்றுமதியாளர்களின் வழங்கல் அடிப்படையை அதிகரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கேகாலை மாவட்டத்தில் உயிர் தாவரங்கள் மற்றும் வெட்டுப் பூக்கள் பற்றிய ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டது.

2. தரம், தர நிர்ணயம் மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாடு

2.1. வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

- **தொழில்நுட்பம் - ஆடைக் கைத்தொழில் துறைக்காக சீனாவில் இடம்பெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

புத்தம் புதிய தொழில் நுட்பத்தை மேம்படுத்துவது பற்றிக் கற்றுக்கொள்வதற்காக பன்னிரண்டு (12) ஆடை கம்பனிகளுக்கு சீனாவில் சுற்றுலாவை மேற்கொள்வதற்காக உதவி வழங்கப்பட்டது. 3 நிறுவனங்களினால் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

- **வாகன உதிரிபாக தயாரிப்பு கைத்தொழில் தொடர்பாக இந்தியாவின் மும்பாய் நகரத்தில் இடம்பெற்ற தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வெளிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்)**

  உலகளாவிய மதிப்பு சங்கிலியுடன் இணைந்து கொள்வதன் மூலம் சர்வதேச சந்தையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதும் மேம்படுத்தப்பட வேண்டியதுமான துறையாக வாகன உதிரிப்பாகங்கள் தயாரிப்பு கைத்தொழில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

  ஏற்றுமதி அபிவிருத்தி சபை இந்தியாவின் மும்பாய் நகரில் உள்ள இலங்கை துணை தூதரக நாயகம் அவர்களின் உதவியுடன் கைத்தொழிலின் தேவை, சர்வதேச தரங்கள், மற்றும் புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் பற்றிய அடிப்படை அறிவை வழங்குதல் மற்றும் அதற்கான வெளிப்பாட்டு வாய்ப்புகளை வழங்குதல் ஆகிய நோக்கத்துடன் இந்தியாவின் வாகன ஆராய்ச்சி சங்கத்தின் தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வெளிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ஆகிய உயர்தர பொருட்கள் மற்றும் தன்மையை வெளிக்காட்டல் பரீட்சித்தல் மற்றும் சான்றுப்படுத்துதல் பற்றிய நிகழ்ச்சித்திட்டமொன்று 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தியாவின் வாகன ஆராய்ச்சி சங்கம் என்பது இந்தியாவின் கனரக கைத்தொழில் மற்றும் பொது தொழில்முயற்சி அமைச்சுடன் இணைந்த சுயாதீன நிறுவனமாகும்.

  இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 8 கம்பனிகள் பங்குபற்றின. இந்தியாவின் வாகன ஆராய்ச்சி சங்கத்தினால் 5 நாட்கள் நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டத்தில் விரிவுரை, பரிசோதனை செய்யும் ஆய்வுகூடம், மற்றும் வாகனங்களை/ வாகன உதிரிப் பாகங்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு சுற்றுலாக்களை மேற்கொள்ளுதல் என்பனவும் உள்ளடங்கியிருந்தன.

  பங்குபற்றுநர்களுக்கு டாட்டா மோட்டார்ஸ், ஸ்கோடா ஆட்டோ வோக்ஸ்வேகன் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் இந்தியாவின் பூனே நகரில் அமைந்துள்ள மஹிந்திரா அண்ட் மஹிந்திரா லிமிடெட் போன்ற நல்ல முறையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கம்பெனிகளுக்கு விஜயம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

  பங்குபற்றுநர்களுக்கு தமது தயாரிப்புகளின் மாதிரிகளை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் வாகன ஆராய்ச்சி சங்கத்தின் பரீட்சித்தல் வசதிகளை பெற்றுக்கொள்ளும் தொடர்புகளை கட்டியெழுப்பக் கூடியதாக இருந்த அதேவேளையில் அந்த கம்பனிகளுக்கு உலகளாவிய மதிப்புச் சங்கிலியுடன் இணைந்து கொள்வதற்கு அவர்களின் தயாரிப்புகளில் தர நிர்ணயத்திற்காக நிறுவனத்திற்கு உள்ளேயே பரீட்சித்தல் வசதிகளை மேம்படுத்துவதற்காக உதவுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை திட்டமிட்டு வருகின்றது.

2.2. உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்

இலங்கை டயர் உற்பத்தி கைத்தொழில்கள் டயர் மற்றும் டயர் தொழில்நுட்பம் சம்பந்தமான செயலமர்வு (2019 ஜூலை மாதம்)

கைத்தொழிலின் கேள்விக்கு அமைவாக உலகலாவிய டயர் கைத்தொழிலின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதற்காக இந்திய தொழில்நுட்ப நிபுணர்களின் சேவையை பெற்று இலங்கை இரப்பர் உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களினதும் சங்கத்தின் மற்றும் இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இரப்பர் நிறுவனத்தினரும் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் இரண்டாவது தடவையாகவும் டயர் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஒரு நாள் செயலமர்வு ஒன்று கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டது. கைத்தொழிலின் பெருமதி வாய்ந்த அபிவிருத்திகள் பற்றிய அவர்களது அறிவை பெற்றுக்கொள்வதற்காக இதன் மூலம் வாய்ப்பு கிடைத்தது என கைத்தொழில் பிரதிநிதிகளின் அபிப்பிராயமாக இருந்தது. உற்பத்தி புத்தாக்கம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி போன்ற துறைகள் உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்

மூலம் டயர் கைத்தொழில் தொழில்நுட்பத் துறையிலுள்ள 100 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான நபர்கள் நன்மைகளை பெற்றுக் கொண்டனர்.

சிறிய இரப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கும் உற்பத்தித் திறன் மேம்பாடு தொடர்பான செயலமர்வு (2019 டிசம்பர் மாதம்)

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இரப்பர் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 'நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதினூடாக சிறிய இரப்பர் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்' தொடர்பான இரண்டாவது செயலமர்வு மொனராகலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 40 சிறிய அளவிலான ரப்பர் விவசாயிகளுக்காக 2019 டிசம்பர் 18 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

இலங்கையில் இரப்பர் தயாரிப்பு கைத்தொழிலுக்கு ஒரு நிலையான விநியோகச் சங்கிலியை உறுதி செய்வதற்கு மேலதிகமாக, உற்பத்தி செலவைக் குறைப்பதற்கும், தோட்டங்களின் இலாபத்தை அதிகரிப்பதற்கும் சிறிய இரப்பர் தோட்ட உரிமையாளர்களிடையே அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை பிரபலப்படுத்துவதன் மூலம் தேசிய இரப்பர் உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பன இந்த செயலமர்வின் நோக்கமாகும்.

இது தொடர்பான முதலாவது செயலமர்வு ஏற்றுமதி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தெரிவு செய்யப்பட்ட 40 சிறிய அளவிலான இரப்பர் விவசாயிகளுக்காக 2019 மே மாதம் 31 ஆம் திகதியன்று கேகாலையில் நடத்தப்பட்டது.

பங்குபற்றுநர்கள், இதுபோன்ற ஒரு செயலமர்வை அனுபவித்தது இதுவே முதல் முறை என்று கருத்து தெரிவித்துள்ள அதேவேளையில், கிராமப் புறங்களில் அதிகமான செயலமர்வுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். பங்குபற்றுநர்களுக்கு இறப்பர் பால் எடுத்தல், குறைந்த - செறிவு கொண்ட இரப்பர் பால் எடுத்தல், விளைச்சலை அதிகரித்தல், சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் இயற்கை இரப்பர் விலை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இயற்கை இரப்பருக்கான உலகளாவிய கேள்விகள் பற்றிய பொதுவான அறிவு வழங்கப்பட்டது.

மலும் பங்குபற்றிய இறப்பர் பயிர்செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்பாக பொருட்கள் அடங்கிய பொதியொன்று வழங்கப்பட்டது. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இரப்பர் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றினால் முறையே இரப்பர் பால் வெட்டும் கத்தி மற்றும் இரசாயன பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. இலங்கையின் இயற்கை இறப்பரைப் பயன்படுத்தி இரப்பர் தயாரிப்புக்களை தயாரிக்கின்ற மற்றும் ஏற்றுமதி செய்கின்ற முன்னணி நிறுவனமாகிய Camso Loadstar (Pvt) Ltd நிறுவனத்தினால் இரப்பர் பால் வெட்டும் போது பயன்படுத்தப்படும் ஹெட்லைட் நன்கொடையாக வழங்கப்பட்டன.

3. சந்தை அபிவிருத்தி மற்றும் மேம்பாடு

3.1. வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

சர்வதேச வர்த்தக நிகழ்வுகளில் இலங்கையின் பங்கேற்பு

பெரும்பாலும் ஒவ்வொரு வருடமும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால், உலகம் பூராவும் இடம்பெறுகின்ற சர்வதேச வர்த்தக சந்தைகளிலும் கண்காட்சிகளிலும் பங்குபற்றுவதற்கு இலங்கை கம்பனிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த சகல வர்த்தகக் கண்காட்சிகளிலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் இலங்கையின் காட்சிக் கூடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

- **ஆசியா**

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை சீனாவின் ஷெங்ஹய் நகரில் இடம்பெற்ற China International Import Expo கண்காட்சிக்காக 15 கம்பெனிகள் பங்குபற்றின. அந்த கம்பனிகளுக்கு கண்காட்சி மற்றும் B2B கலந்துரையாடல்களுக்கும் 5000 கோரிக்கைகளும் ஐ.அ.டொலர் 1,406,023 பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை ஜப்பானில் இடம்பெற்ற IT Week நிகழ்வில் 9 ICT/BPM கம்பெனிகள் பங்குபற்றின. 4 கூட்டு வியாபாரங்களை ஏற்படுத்திக்கொண்டதற்கு மேலதிகமாக, அந்த கம்பனிகளினால் ஐ.அ.டொலர் 1 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கைகளை செய்துகொள்ளக் கூடியதாக இருந்தது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 திகத முதல் 10 ஆம் திகதி வரை இடம்பெற்ற ஜப்பான் டோக்கியோ இன்டர்நேஷனல் மினரல் பெ.்யார் நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காக 8 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டன அவர்களுக்கு பெறுமதிவாய்ந்த மற்றும் பாதியளவு பெறுமதிவாய்ந்த கற்களின் விற்பனையின் மூலம் ஐ.அ.டொலர் 227,500 தொகையை சம்பாதிக்க கூடியதாக இருந்தது. சுமார் 5000 நபர்கள் அவர்களது காட்சிக் கூடங்களை பார்வையிடுவதற்கு வருகை தந்த அதேவேளையில், அதில் இலங்கையின் இரத்தினக் கற்களை வெட்டும் கைத்தொழிலில் ஆற்றல்கள் பற்றிய அறிவு வழங்கப்பட்டன. மேலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 முதல் 14 ஆம் திகதி வரை பாங்காக் நகரில் இடம்பெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியில் 6 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் பங்குபற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதியாளர்களுக்கு ஐ.அ.டொலர் 150,000 பெறுமதியான கட்டளைகள் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளையில், ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து, கனடா, பிரான்ஸ் மற்றும் சீனா போன்ற நாடுகளிலுள்ள வாங்குபவர்களின் கோரிக்கைகளும் கிடைக்கப்பெற்றன. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2019 டிசம்பர் மாதம் 13 முதல் 25 திகதி வரை இடம்பெற்ற இந்தியா இன்டர்நேஷனல் மெகா ட்ரேட் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக 8 கம்பனிகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டன. அதில் பங்குபற்றிய கம்பனிகளுக்கு அண்ணளவாக ஐ.அ.டொலர் 100,000 பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் கிடைத்துள்ள அதேவேளையில், ஐ.அ.டொலர் 37,500 பெறுமதியான கட்டளைகள் சம்பந்தமாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று 2020 பெப்ரவரி அளவில் ஐ.அ.டொலர் 4500 பெறுமதியைக் கொண்ட கட்டளைகளை அந்த கம்பனிகளினால் நடைமுறைப்படுத்த முடிந்துள்ளது.

- **ஐரோப்பா**

2019 அக்டோபர் 5 முதல் 9 ஆம் திகதி வரை ஜெர்மனியின் கொலோன் நகரில் இடம்பெற்ற Anuga 2019 கண்காட்சியில் பங்குபற்றுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பத்தொன்பது (19) நிறுவனங்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. இலங்கையின் காட்சிக் கூடங்களை கூடுதலான நபர்களை கவர்ந்தீர்த்தமை மற்றும் இலங்கையின் சமையல் கலைக்கு உரித்தான சுவை மற்றும் தரம் ஆகியவற்றை பிரபல்யப்படுத்துவதற்காக சமைத்தல் தொடர்பான கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இதன்போது ஏற்றுமதியாளர்களுக்கு ஐ.அ.டொலர் 575,000 பெறுமதியைக் கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளும் 1200 இற்கும் கூடுதலான வர்த்தக ஒப்பந்தங்களும் கிடைக்கப்பெற்றன. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 3 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கும் 3 பாரிய கம்பனிகளுக்கும் இரப்பர் தயாரிப்பு சம்பந்தமாக B2B கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. நிகழ்ச்சித் திட்டத்தின் போது, 2 கம்பனிகளுக்கு ஐ.அ.டொலர் 20,800 பெறுமதியான கட்டளைகள் கிடைத்துள்ள அதேவேளையில், உடற்பயிற்சி பட்டிகள், சுடுநீர் போத்தல்கள் மற்றும் கதவுத் தடுப்பகள் ஆகியவற்றுக்காக 6 உடன்படிக்கைகளும் செய்து கொள்ளப்பட்டன. பங்குபற்றுர்களுக்கு சந்தை போக்குகள் மற்றும் புத்தாக்க தயாரிப்புகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பம் பற்றிய அறிவை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. 2019 மே மாதம் 7 முதல் 9 ஆம் திகதி வரை பெல்ஜியம் நாட்டின் பிராஸ்ஸல்ஸ் நகரில் இடம்பெற்ற Belgium Seafood Global நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 6 ஏற்றுமதியாளர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. இதில் அவர்களுக்கு ஐ.அ.டொலர் 0.36 மில்லியன் கட்டளைகள் கிடைத்துள்ள அதேவேளையில், 1.9 மில்லியன் பெறுமதியான கட்டளைகள்

நடைமுறைப்படுத்தப்பட்டன. 2019 ஏப்ரல் 23 முதல் 26 ஆம் திகதி வரை இடம்பெற்ற B2B கலந்துரையாடலின் பின்னர் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஏழு (7) வர்த்தக கம்பனிகளின் பேரவையில் பங்குபற்ற செய்யப்பட்டன. ஆரம்ப செயற்பாடுகளின் ஒரு பகுதியாக ஹங்கேரிய நாட்டின் கம்பெனிகளுடன் 30 B2B கலந்துரையாடல்களும் போலந்து நாட்டின் கம்பெனிகளுடன் 50 B2B கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

- **மத்திய கிழக்கு நாடுகள்**

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 முதல் 21 ஆம் திகதி வரை இடம்பெற்ற துபாய் GULFFOOD கண்காட்சியில் 26 கம்பெனியின் பங்காற்றின. இந்த கம்பெனிகளினால் ஐ.அ.டொலர் 7.86 மில்லியன் பெறுமதியான கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளையில் ஐ.அ.டொலர் 8.42 மில்லியன் பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் கிடைக்கப்பெற்றன.

- **அமெரிக்கா**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 6 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களுக்கும் 3 பாரிய அளவு கம்பெனிகளுக்கும் 2019 ஜூலை மாதம் 22 முதல் 24 ஆம் திகதி வரை இடம்பெற்ற USA Apparel Sourcing நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்போது 3 கம்பனிகளினால் ஆர்வமுள்ள வாங்குநர்களுக்கு மாதிரி, செலவு மற்றும் விலை நிர்ணயம் என்பன சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளையில் ஐ.அ.டொலர் 100,000 பெறுமதியான கட்டளைகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதேபோன்று Canada - GIC Grocery Innovation நிகழ்வில் பங்குபற்றிய 9 கம்பனிகளுக்கு சுமார் 100 சாத்தியமுள்ள வர்த்தக விசாரணைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த விசாரணைகளின் பின்னர் இரண்டு கம்பனிகள் கனடாவுக்கு தேங்காய்களின் உள்ளீட்டு தயாரிப்பு மாதிரிகளும் அனுப்பப்பட்டன.

பிரேசில் - 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பிரேசில் நாட்டின் சாஓ போவ்லோ Sao Paulo நகரில் இடம்பெற்ற இலங்கையை மேம்படுத்தும் நிகழ்வுக்கு இணையாக தேயிலை, இயந்திர சாதனங்கள் மற்றும் இரப்பர் ஆகிய துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி 3 கம்பனிகளை உள்ளடக்கிய இலங்கைத் தூதுக்குழுவொன்று பிரேசில் நாட்டுக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டது. இதனூடாக தேயிலை கம்பனிக்கு ஐக்கிய அமெரிக்காவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது. கியூபா - 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் தேதி வரை ஏற்றுமதி முகவர் நிறுவனங்களுடன் வட்டமேசை கலந்துரையாடலுக்கான 3 கம்பனிகளை உள்ளடக்கிய இலங்கை தூதுக்குழுவொன்று கியூபா நாட்டிற்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டது. அவர்கள் பதப்படுத்தப்பட்ட உணவு வாசனை திரவியங்கள் உறைவுப் பெட்டகத்துக்கு/ ஆழ் உறைவுப் பெட்டகத்துக்கு உள்ள வாய்ப்புகள் அடையாளம் காணப்பட்டன.

3.2. உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்

ஏற்றுமதியாளர்களுக்கு சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் மற்றும் B2B கலந்துரையாடலுக்கு பங்குபற்றுவதற்கு வசதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக, கடந்த காலங்களைப் போன்று ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் வியாபாரங்களை விரிவுபடுத்துவதற்காக உதவி அளிப்பதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் உள்நாட்டு வர்த்தக கண்காட்சிகளில் கண்காட்சி கூட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் இணை ஒழுங்குபடுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வழமை போன்று, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் கைத்தொழிலின் இருப்பை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2019 ஆம்

ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி 2019 இற்கு ஒழுங்குபடுத்தலை மேற்கொண்டது. இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு/ நுண் தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. 225 வர்த்தகக் கூடங்களை கொண்ட கண்காட்சிக்காக 101 உள்நாட்டு காட்சிப்படுத்துநர்களும் 27 வெளிநாட்டுக் காட்சிப்படுத்துநர்களும் பங்குபற்றினர். 2000 புதிய ஏற்றுமதியாளர்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டத்துடன் பதிவுசெய்துள்ள 12 சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்காக 6 கண்காட்சி கூட்டங்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த வருடாந்த நிகழ்வினூடாக பிரசித்தத்திற்காக Mondapelle சஞ்சிகையுடன் இணைந்த வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவரை வரவழைப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 10 சிறிய மற்றும் நடுத்தர அளவு ஆபரண தயாரிப்பாளர்களுக்கு Facets Sri Lanka கண்காட்சி பங்குபற்றுவதற்கு உதவி அளிக்கப்பட்டது. அவர்களுக்கு நிபுணர்களின் வழிகாட்டலில் கீழ் தயாரிக்கப்பட்ட வர்த்தகச் சின்னம் இடப்பட்ட ஆபரணங்களை காட்சிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது. பங்குபற்றுநர்ளுக்கு அந்த இடத்தில் ரூபா 3.5 மில்லியனுக்கு விற்பனையை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

4. வர்த்தகக் குறிப் பெயரை இடுதலும் உற்பத்திகளை நிலைநிறுத்துதலும்

4.1. இலங்கையின் வாசனை திரவியங்களுக்கு வர்த்தகக் குறிப் பெயரை இடுதல்

இலங்கையின் வாசனை திரவியங்களுக்கு தேசிய வர்த்தகக் குறிப் பெயர் நிர்மாணிக்கப்பட்டது (சிங்கம் என்பது வர்த்தகக் குறி, வர்த்தகக் குறிப் பெயர் இலங்கையின் வாசனை திரவியங்கள் கீழே காணப்படும் வாசகம் Born in Sri Lanka)

ஆறு (06) வர்த்தக குறியீடுகள் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (Ceylon spices, Ceylon Cinnamon, Ceylon Cardamom, Ceylon Nutmeg, Ceylon Mace மற்றும் Ceylon Pepper)

தேசிய வர்த்தகக் குறிப் பெயர் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளையில் சர்வதேச வர்த்தகக் குறிப் பெயர் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி ஜெர்மனியில் ANUGA food fair நிகழ்வில் ஆரம்பிக்கப்பட்டது

வர்த்தகக் குறிப் பெயரின் மூலம் இலங்கை வாசனை திரவியங்களுக்கே உரித்தான தனித்துவமான பண்புகள் எடுத்துக் காட்டப்படுகின்ற அதேவேளையில், அவை உலகின் ஏனைய வாசனை திரவியங்களை உற்பத்தி செய்கின்ற நாடுகளின் உற்பத்திகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. வர்த்தகக் குறிப் பெயரின் மூலம் வாங்குனர்களுக்கு வர்த்தகக் குறிப் பெயரின் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுடன் தொடர்புபட்ட தர நிருணயங்களுக்கு இணங்கியதாக தர நிருணயத்தை கொண்ட உற்பத்திகள் சான்றுப்படுத்தப்படுகின்றன.

4.2. இலங்கையின் கருவாவுக்கான புவியியல் குறிகாட்டி

இலங்கையின் முதலாவது புவியியல் குறிகாட்டி தயாரிப்பாக இலங்கை கருவாவைப் பதிவு செய்வதற்கு தொடர்புடைய பங்குதாரர்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கை கருவா புவியல் குறிகாட்டி சங்கத்தை ஸ்தாபித்தல் - மதிப்பு சங்கிலியிலுள்ள சகல பங்குதாரர்களும் உட்பட 200 அங்கத்தவர்கள் இதில் உள்ளடங்கியுள்ளனர்.
- புவியியல் குறிகாட்டி செயலமர்வு - இலங்கையின் கருவாவுக்கான புவியியல் குறிகாட்டியைப் பெற்றுக் கொள்வதன் நன்மை மற்றும் புவியல் குறிகாட்டி தயாரிப்பாக கருவாவை ஏற்றுமதி செய்யும்போது பின்பற்றப்பட வேண்டிய செலவுகள் பற்றி கருவா பயிரிடப்படுகின்ற பிரதான மாவட்டங்களில் உள்ள பங்குதாரர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது (பெருந்தோட்ட பயிர்ச் செய்கையாளர் சங்கத்திற்காக மாத்தறை, காலி, இரத்தினபுரி, களுத்துறை, ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் 6 செயலமர்வுகள் நடத்தப்பட்டன)
- புவியியல் குறிகாட்டி சட்டத்தை வரைவு செய்வதற்காக UNIDO ஊடாக NIPO இற்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டது.
- இலங்கை கருவா புவியல் குறிகாட்டி சங்கத்திற்காக உள்ளக நிர்வாக பொறிமுறையொன்றை தாபிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.3. துபாய் எக்ஸ்போ 2020

அரபு உலகில் இதுவரை இடம்பெறுகின்ற அபிமானம்மிக்க வர்த்தக கண்காட்சி ஆகிய துபாய் எக்ஸ்போ 2020, 2020 அக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கும் 2021 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில் இடம்பெறுகின்றது. துபாய்க்கும் அபுதாபிக்கும் இடையில் அமைந்துள்ள 438 ஹெக்டேர் நிலப்பரப்பில் இடம்பெறுகின்ற உலகின் மிகவும் மாறுபட்ட கண்காட்சியாக இருக்கும் என்று கருதப்படுகின்ற இதில் 200 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான நாடுகள் தரமான தயாரிப்புகளை காட்சிப்படுத்துகிற அதேவேளையில் அதற்காக 70% சதவீத வெளிநாட்டவர்களை உள்ளடக்கியதாக 25 மில்லியனுக்கும் அதிகமான மக்களை கவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துபாய் எக்ஸ்போ 2020 இற்காக இலங்கையின் பங்குபற்றுதலுக்காக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை முன்னணி வகிக்கின்றது. 'Opportunity' என்ற கருப்பொருளின் கீழ் இலங்கை பங்குபற்ற உள்ள அதேவேளையில் 'Island of Ingenuity' என்பதை இந்நாட்டின் கண்காட்சி கூடத்தில் தலையங்கமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த ஆர்வம் உள்ள தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு 2019 ஆம் ஆண்டு துபாய் எக்ஸ்போ 2020 கண்காட்சிக்காக இலங்கையின் பங்குபற்றுவதற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை பீடத்தின் ஒருங்கிணைந்த வடிவமைப்பு திணைக்களத்தின் மாணவர்களினால் இலங்கை கண்காட்சி கூடம் வடிவமைக்கப்படவுள்ளது. அதன் மூலம் எமது நாட்டின் வளமான ஏற்றுமதிகள் எடுத்துக் காட்டப்படுகின்ற அதேவேளையில், தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டத்தின் மூலம் இலக்கு வைக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ள துறைகளுக்கு முன்னுரிமை வழங்கி புத்தாக்கம் மற்றும் சேவைகளினூடாக செயற்படுகின்ற ஏற்றுமதி நிலையமாகவும் மேம்படுத்தப்படும்.

4.5. சனாதிபதி ஏற்றுமதி விருது 2018/19

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் அனுசரணையின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட 23 ஆவது சனாதிபதி விருது விழா ஏற்றுமதியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிதிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

- ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சனாதிபதி ஏற்றுமதி விருது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான கௌரவ விருதாக இருக்கின்ற அதேவேளையில் தொடர்புடைய வருடத்தில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

- 23 ஆவது 2018/19 சனாதிபதி ஏற்றுமதி விருது விழாவில் 14 ஒட்டு மொத்த விருதுகளும், 42 துறைரீதியான விருதுகளும், 33 தகுதிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும் 2000 புதிய ஏற்றுமதியாளர்கள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தங்கம், வெள்ளி மற்றும்

வெண்கல விருதுகளாக 3 விசேட ஏற்றுமதி அபிவிருத்தி சபை விருதுகளும் அதே விழாவில் வழங்கப்பட்டன.

5. புதிய ஏற்றுமதியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பிராந்திய ரீதியில் இருக்கின்ற தொழில் முயற்சியாளர்களை ஏற்றுமதிச் சந்தைகளில் பிரவேசிப்பதை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி மதிப்பு சங்கிலியில் உள்நாட்டு வழங்கல் வலையமைப்புடன் ஒன்றிணைத்தல் ஆகிய நோக்கத்துடன் 2017 - 2020 ஆம் ஆண்டுகளில் 2000 புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அடையாளம் காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழிலாளர்களுக்கான தேவைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் ஒவ்வொரு கம்பனியிலும் அடையாளம் காணப்பட்ட தேவைகளுக்கு அமைவாக கொள்ளளவு அபிவிருத்தி, உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் உதவி அளிக்கப்பட்டது. வருடத்தினுள் பிராந்திய ரீதியாக 2,095 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்காக நன்மைகளை வழங்கி 131 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் இந்நாட்டுக்கு ஐக்கிய அமெரிக்க டாலர் 13.2 மில்லியன் மொத்த ஏற்றுமதி வருமானமொன்றை கொண்டுவந்துள்ள அதேவேளையில் 60 நேரடி ஏற்றுமதியாளர்களையும் 75 மறைமுக ஏற்றுமதியாளர்களையும் உருவாக்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டு சனவரி 28, பெப்ரவரி 22 மற்றும் மார்ச் 1 ஆம் திகதிகளில் முறையே கேகாலை, அனுராதபுரம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் "2000 புதிய ஏற்றுமதியாளர்கள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்" சம்பந்தமான மூன்று பிரதான மாநாடுகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சி திட்டத்தின் மூலமும் ஏற்றுமதியாளர்களாக/ மறைமுக ஏற்றுமதியாளர்களாக மேம்படுத்தப்பட வேண்டிய 25 கம்பெனிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

உதவி	**நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**
கொள்திறன் அபிவிருத்தி	62	1,587
உற்பத்தி அபிவிருத்தி	21	356
சந்தை அபிவிருத்தி (உள்நாட்டு மற்றும் சர்வதேச) <u>சர்வதேசம்</u> • THAIFEX 2019, பேங்கொக் • அன்ன பூர்ணா வர்த்தக கண்காட்சி இந்தியா • நிகழ்வுக்கான வெளிப்படுத்துகைச் சுற்றுலா பிலிப்பைன்ஸ்	48	152
மொத்தம்	**131**	**2,095**

பெண் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பெண் தொழில்முயற்சியாளர்களை ஏற்றுமதி வர்த்தகத்திற்காக அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுவரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக ஏற்றுமதிக்கு சாத்தியமுள்ள 200 பெண்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு உள்நாட்டிலும் அதேபோன்று

அவுஸ்திரேலிய விருது Women Trading Globally – 2019 உட்பட பல சர்வதேச நிகழ்வுகளுக்காக பங்குபற்றுவதற்கான உதவியும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

அதற்கு மேலதிகமாக, மீளாய்வுக்கு உட்படுகின்ற கால எல்லைக்குள் சம்பத் வங்கியின் உதவியுடன் இரண்டு நாள் வியாபார திட்டமிடல் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வின் போது இருபது (20) பங்குபற்றுநர்களுக்கு வியாபாரத் திட்டங்களை தயாரிப்பதற்காக உதவி அளிக்கப்பட்டது.

6. வர்த்தக வசதிகள் மற்றும் வர்த்தகத் தகவல்கள்

ஏற்றுமதியாளர்களின் பேரவை

தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கும் அவர்களின் வர்த்தக பிரச்சினைகளுக்கு பதில்களை பெற்றுக்கொள்வதற்காக கைத்தொழிலின் பக்கத்தோற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏற்றுமதியாளர்களுக்கு மேடையொன்றை அமைத்துக் கொடுக்கும் நோக்கில் விடயப் பொறுப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் கடந்த வருடத்தில் 04 பேரவைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. நாடுகளுக்கு இடையே வர்த்தக வசதிகளை வழங்குவதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு ஒழுங்குமுறை, கொள்கை ரீதியான மற்றும் செயற்பாட்டு பிரச்சினைகளை பிரச்சனைகளை கலந்துரையாடி, தீர்த்துக் கொள்வதற்காக பொது மேடையொன்றை அமைப்பதற்கு இந்தப் பேரவை நடாத்தப்பட்டன.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் ஒத்துழைப்புடன் 2019 ஆம் ஆண்டின் ஜனவரி, ஏப்ரல், ஜூன் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் நான்கு பேரவைகள் நடத்தப்பட்டன.

ஏற்றுமதியாளர்களினால் தமது பிரச்சினைகள் தபால் மூலமாகவும் மின்னஞ்சல் (forum@edb.gov.lk) ஊடாகவும் அல்லது அதற்கான நேரடி நிகழ்நிலை மேடையின் Online Alert for Trade Obstacles (OATO http://www.forum.edb.gov.lk/) ஊடாக ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு அனுப்பப்படுகின்றது.

விபரம்	17 ஆவது பேரவை	18 ஆவது பேரவை	19 ஆவது பேரவை	20 ஆவது பேரவை
கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை	19	11	11	10
தீர்க்கப்பட்ட பிரச்சனைகளின் எண்ணிக்கை	09	04	08	06

ஏற்றுமதி சார்ந்த வெளியீடுகள்

பிஸ்னஸ் லாங்கா சஞ்சிகை

சர்வதேச சந்தையில் இலங்கையின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்காக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள், உலகளாவிய சந்தைகளில் இலங்கையின் வர்த்தக சின்னம் மற்றும் சேவை வழங்கலில் எதிர்கால நிலையம் எனும் கருப்பொருளை உள்ளடக்கியதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் காலாண்டு சர்வதேச சஞ்சிகைகளின் 03 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ள அதேவேளையில், அவை 500 கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உலகளாவிய சந்தைகளில் இலங்கையின் வர்த்தக சின்னம் மற்றும் சேவை

வழங்கலில் எதிர்கால நிலையம் சஞ்சிகையின் இலத்திரனியல் பிரதிகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

எக்ஸ்போ நியூஸ்

சர்வதேச/ உள்நாட்டு வர்த்தகக் கண்காட்சி/ நிகழ்வுகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் விளம்பரங்கள் தொடர்பான ஏனைய முக்கியமான தகவல்களை உள்ளடக்கிய மாதாந்த எக்ஸ்பிரஸ் நியூஸின்/ செய்திமடலின் 12 இலத்திரனியல் பிரதிகள் சுமார் 1,165 ஏற்றுமதியாளர்களிடையே/ தொழில்முயற்சியாளர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதிச் செயலாற்றுகைக் குறிகாட்டி 2009 - 2018

ஏற்றுமதி செயலாற்றுகை குறிகாட்டி என்பது இலங்கையின் ஏற்றுமதி துறையுடன் தொடர்பான விவரமான தரவுகள் அடங்கிய ஒரு வெளியீடாகும். இந்த வெளியீடு அச்சு மட்டும் இறுவட்டு வடிவில் தொடர்புடைய நிறுவனங்கள் வர்த்தக மன்றங்கள் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

சான்றிதழ் கற்கைநெறி

- **சர்வதேச வர்த்தகத்தில் செயற்பாட்டு நோக்குகள் பற்றிய கற்கை நெறி**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசாங்க துறையிலுள்ள நிறுவனங்களின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்டத்திலுள்ள பதவிகளை வகிக்கின்ற 45 நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் சர்வதேச வர்த்தகத்தில் செயற்பாட்டு நோக்குகள் எனும் 87 ஆவது கற்கைநெறி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

பங்குபற்றுநர்களுக்கு சர்வதேச வர்த்தகம் பற்றிய தெளிவான அறிவை வழங்குதல், அவர்களுக்கு அவ்வாறு பெற்றுக்கொண்ட அறிவை அன்றாட செயற்பாடுகளின் போது பயன்படுத்தக் கூடிய ஆற்றலை வழங்குதல் என்பன இந்த கற்கைநெறியின் பிரதான நோக்கமாகும்.

கற்கைநெறியின் போது பங்குபற்றுநர்களுக்கு ஏற்றுமதி நடவடிக்கை முறைகள் மற்றும் சான்றுப்படுத்தல், கப்பலேற்றுதல் மற்றும் போக்குவரத்து, இலங்கை துறைமுக அதிகாரசபை, ஏற்றுமதி நடவடிக்கை முறைகள் மற்றும் ஆவணப்படுத்தல், சுங்க பிணைமுறி நடவடிக்கைமுறைகள் மற்றும் ஏற்றுமதிக்கான வசதியளித்தல், விமான சரக்கு நடவடிக்கை முறைகள், பொதியிடல் முறைகள், சர்வதேச வர்த்தகத்தில் உள்ள கொடுப்பனவு, விற்பனை ஒப்பந்தங்கள், செலவிடல் மற்றும் விலையிடல், சர்வதேச வர்த்தகத்தில் உள்ள கொடுப்பனவு முறைகள், சுங்க விலை மதிப்பீடு, முதலீட்டுச் சபை நடவடிக்கை முறைகள், கடல் காப்புறுதி மற்றும் சரக்கு காப்புறுதி, முன்னுரிமை வர்த்தகஉடன்படிக்கை சர்வதேச காரணி, ஈ- வர்த்தகம் மற்றும் பேச்சுவார்த்தை திறன்கள் தொடர்பான கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இலங்கை சுங்கத் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகார சபை, வங்கிகள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, முதலீட்டுச் சபை மற்றும் ஏனைய தொடர்புடைய தொழில் நிறுவனங்களில் இருந்து வருகை தந்த தொழில் வல்லுனர்களினால் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, ஒருநாள் கல்வி சுற்றுலாவின் போது ஏற்றுமதி நடவடிக்கை முறைகள் பற்றிய பிரயோக அறிவை பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை சுங்கத்திலுள்ள ஏற்றுமதி வசதி அளித்தல் நிலையம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள விமானச் சரக்கு கிராமம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்யக் கிடைத்தது.

- **ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கை முறைகள் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி**

கப்பல் சரக்கு அனுமதி நடவடிக்கைகள், போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றில் உள்ள செயற்பாடுகள் தொடர்பாக பங்குபற்றினர்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, முறையே 43 மற்றும் 42 பங்குபற்றுனர்களுக்கு 150 ஆவது மற்றும் 151 ஆவது கற்கை நெறிகளை நடாத்தியது.

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

- ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதியன்று, 90 ICT/BPM ஏற்றுமதியாளர்களுக்காக ஜப்பானிய சந்தை வாய்ப்புகள் தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது.
- 72 அச்சிடும் நிறுவனங்களுக்காக குருநாகல் மற்றும் கண்டியில் நடைபெற்ற 02 பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. அபிவிருத்தி செய்யப்படுவதற்காக 20 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டன.
- இலக்குத் துறைமுகங்களில் நிராகரிப்பைக் குறைப்பதற்கு ஜி.சி.சி யிலுள்ள உணவு தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் 120 பங்குபற்றுனர்கள் பங்குபற்றினர்.
- சீனாவிற்கு சேதன விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் தொடர்பாக 110 ஏற்றுமதியாளர்களுக்கு கற்பிக்க சீனாவின் சான்றுப்படுத்தல் நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.
- தொழில்முயற்சி தொடர்பான Webinar பயிற்சி அமர்வுகள் - விடயம்/ ஆற்றல் கட்டியெழுப்புதல் தொடர்பாக 101 அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இளங்கலை பட்டதாரிகளுக்கான சுங்க மற்றும் ஏற்றுமதி நடவடிக்கை முறைகள் பற்றிய அமர்வு - பல்கலைக்கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துதல்.
- சாத்தியமுள்ள ஏற்றுமதியாளர்களுக்காக மாத்தறையில் இடம்பெற்ற ஏற்றுமதி நடவடிக்கைமுறைகள் பற்றிய அமர்வில் 45 பங்குபற்றுநர்கள் பங்குபற்றினர்.
- ஏற்றுமதி வசதியளித்ததற்காக புதிய சுங்க முன்னெடுப்புகள் - புதிய சுங்க முன்னெடுப்புகள் தொடர்பாக 80 ஏற்றுமதியாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.
- முதலீட்டுச் சபையின் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வளையத்தில் இடம்பெற்ற மத்திய நிலைய செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - 44 ஏற்றுமதியாளர்கள்/ நிறுவன உரிமையாளர்கள்/ முகாமையாளர்கள் இதன் மூலம் பயனடைந்தனர்.

மின் சந்தை

சந்தை அணுகுகை, B2B மற்றும் B2C கொடுக்கல் வாங்கல்களை அதிகரித்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கும் ஈ-வர்த்தகத்திற்குள் செல்வதற்கு வசதி அளித்தல் ஆகிய நோக்கத்துடன், தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சர்வதேச சந்தையில் இலங்கை தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கான தேசிய நுழைவு வழியாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தனது இணையத்தளத்தை மேம்படுத்தியுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில், ஆஸ்திரியா, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, ஜப்பான், ஹங்கேரி, ஐக்கிய இராச்சியம், சுவீடன், கனடா, செர்பியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுடன் ஐ.அ.டொ. 1679.55 நிகழ்நிலை கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

82 பக்கத்தோற்றங்களை மாற்றியமைத்தல் மற்றும் 15 புதிய பக்கத்தோற்றங்களை சேர்த்தல் ஆகியவற்றின் மூலம் இலங்கை ஏற்றுமதியாளர்களின் நிகழ்நிலை விபரக்கொத்து இற்றைப்படுத்தப்பட்டது.

இலக்குவைக்கப்பட்ட பார்வையாளர்களை மையமாகக் கொண்டு www.srilankabusiness.com ஊடாக இலங்கை தயாரிப்புகள், சேவைகள், இலங்கை வர்த்தகச் சின்னங்கள் ஆகியவற்றை நிகழ்நிலையில் மேம்படுத்துதல்.

- ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் டிஜிட்டல் மாற்றம் - www.srilankabusiness.com ஐ மறுசீரமைத்தல்.
- சமூக ஊடகங்கள் மற்றும் வலைப்பதிவுகள், முகநூல், லிங்க்ட்இன், ட்விட்டர், யூடியூப், பின்டரஸ்ட், கூகிள்+, டம்ப்ளர் மூலம் இலங்கை தயாரிப்புகளை ஊக்குவித்தல்.
- சர்வதேச கண்காட்சிகளில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் காட்சிக்கூடங்களுக்கு பார்வையாளர்களை ஈர்ப்பதற்கு விசேட நிகழ்நிலை ஊக்குவிப்பு நடவடிக்கைகள்.
- இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள், மன்றங்கள், வெளிநாடுகளில்லுள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் ஏனைய தொழில்முறை அமைப்புகளுடன் வலையமைப்பு இணைப்புகளை நிறுவுதல்.
- அதிகளவிலான காண்பு நிலைகளை பெறுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் இணையத் தளத்தின் ஊடாக ஏற்றுமதி மற்றும் சேவை வர்த்தக சின்னங்களையும் மேம்படுத்துவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வலைத்தளம் மூலம் இணையதள வடிவமைப்பு சேவைகள், வலை ஹோஸ்டிங் சேவைகள், வலை விளம்பர சேவைகள், ஆகியவற்றினூடாக குறைந்த விலையில் நிகழ்நிலையில் இணையதள இருப்பை தாபிப்பதற்கு ஏற்றுமதியாளர்களிக்கு வசதியளித்தல்
- சந்தை பற்றி அறிவு மற்றும் ஏற்றுமதி செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் புள்ளிவிவரங்களை வழங்குதல்.
- ஏற்றுமதியாளர்கள் சமூகம், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உண்மையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட வர்த்தக தகவல்களை வழங்குதல்.
- புகழ்பெற்ற நிகழ்நிலை வாங்குபவர் தரவுத்தளத்தைப் பயன்படுத்தி வாங்குபவர்களைப் பற்றிய விபரங்களை வழங்குதல்.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் இணையத்தளம் மூலமும் நிகழ்நிலை வர்த்தக புள்ளிவிவரங்கள், தயாரிப்பு/ சந்தை அறிக்கைகளை வழங்குதல்.

2020 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்

ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் எடுக்கப்பட்டுள்ள முன்னெடுப்புக்கள் அரசாங்கத்தின் கொள்கை வரைசட்டத்தின் பிரதான மூன்று கொள்கைகளான நட்பு ரீதியான மற்றும் அணிசேராக் கொள்கை, தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட சமூகம் மற்றும் மக்களை மையப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுடன் பிரதானமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பெறுமதி சேர்த்தல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக பண்ட ஏற்றுமதிக்காக 2020 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 13.5 பில்லியன் ஏற்றுமதி இலக்கை நிர்ணயித்து அதற்காக 13.4% சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டிய அதேவேளையில் சேவை ஏற்றுமதிகளுக்காக ஐ.அ.டொலர் 5 பில்லியன் இலக்கை அடைவதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து 18.5% சதவீதத்திலிருந்து அதிகரித்தல் வேண்டும்.

உபாய ரீதியான குறிக்கோள்கள்

தற்போது இருக்கின்ற ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கு ஆதரவளித்தல்.
இலங்கையில் புதிய ஏற்றுமதியாளர்களை மேம்படுத்துதல்.
நாட்டுக்குள் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளை உருவாக்குதல்
இலங்கையின் தற்போதைய ஏற்றுமதி சந்தைகளை மாற்றுதல்.
கொள்திறன் கட்டியெழுப்புவதை மேம்படுத்துதல்.

1) தற்போது இருக்கின்ற ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிகள் மேம்படுத்திக் கொள்வதற்கு ஆதரவளித்தல்

- இலங்கையின் உற்பத்திக்காக உலகளாவிய சந்தை அணுகுகையை அதிகரித்தல்.
- தெரிவுசெய்யப்பட்ட முன்னுரிமை மற்றும் வளர்ந்து வருகின்ற சந்தைகளை கவனத்திற்கொண்டு வர்த்தக கண்காட்சியில் இலங்கையின் பங்குபற்றுதலை ஒழுங்கு செய்தல்.
- தெரிவுசெய்யப்பட்ட சந்தைகளுக்கான நாட்டுக்கு உள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் வர்த்தகத் தூது குழுக்களை ஒழுங்குசெய்தல்.
- சந்தை பற்றிய அறிவை வழங்குதல்

ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளித்தல்.

- "ஏற்றுமதி சந்தை அணுகுகை உதவி" திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- "தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பு" திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல்.
- வள்ளம் கட்டுவதற்கான கைத்தொழில் வலயமொன்றை நிறுவுதல்.
- வர்த்தக நுழைவாயில் (மின் வர்த்தக தகவல் மற்றும் ஊக்குவிப்பு தளத்தை) செயல்படுத்துதல்.
- சீன மற்றும் இந்திய சந்தைகளுக்குள் நுழைவதற்கு இலங்கை நிறுவனங்களுக்கு உதவுங்கள்.

- டயர் ஆய்வு மற்றும் மேம்பாட்டு ஆராய்ச்சி வசதிகளை நிறுவதற்கு உதவுதல்.
- தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டதின் செயல்பாடுகளை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- வர்த்தக புள்ளிவிவரங்கள் மற்றும் வாங்குபவர்களைப் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- ஏற்றுமதியாளர்கள் தனித்தனியாகவும் ஏற்றுமதியாளர்கள் மன்றங்கள் மூலமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்தக்கூறுதலும் தீர்வுகளை வழங்குதலும்.
- பதவி உயர்வுக்கான சிற்றேடுகளை உருவாக்குதல்.
- பிஸ்னஸ் லங்கா சஞ்சிகை, ஏற்றுமதியாளர்களின் விபரக்கொத்து 2020 போன்ற வெளியீடுகளை உருவாக்குதல்.
- இறக்குமதி/ ஏற்றுமதி செயல்முறை மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் செயற்பாட்டு நோக்குகள் மற்றும் ஏற்றுமதி பொதியிடல் குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- மின் நூலகத்தை தாபித்தல்.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கூட்டுறவு வீடியோ 2020 ஐத் தயாரித்தல்.
- ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கலின் மூலம் ஏற்றுமதியாளர்களை அங்கீகரித்தல்.
- மின் சந்தை நிகழ்நிலை வர்த்தக மேடையை மேம்படுத்துதல்.
- ஆலோசனைக் குழுக்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

2) இலங்கையில் புதிய ஏற்றுமதியாளர்கள் உருவாகுவதை ஊக்குவித்தல்

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி

<u>2000 புதிய ஏற்றுமதியாளர்களை அபிவிருத்தி செய்தல்</u>

- புதிய ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சியாளர்கள் மற்றும் புதிய ஏற்றுமதி சார்ந்த பெண் தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணுதல்.
- விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தீவு முழுவதும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- தயாரிப்பு அபிவிரத்திக்கான பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- பொதியிடல் மற்றும் அடையாளமிடுதல் மற்றும் ஏற்றுமதி விலையிடல் மற்றும் செலவு குறித்தல் சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்துதல்.

<u>பெண்கள் தொழில்முயற்சியாளர்களின் அபிவிருத்தி</u>

- சந்தை-சரக்குச் செறிவு நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்தல்.
- சர்வதேச மற்றும் உள்ளூர் கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கு பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுதல்.
- திறன் மேம்பாடு, உற்பத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி நிகழச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

<u>ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் (OVOP)</u>

- பிராந்திய மட்டத்தில் ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி/ கொத்தணிகளை ஸ்தாபித்தல் மற்றும் அந்தக் கொத்தணிகளில் உள்ள விவசாயிகளுக்கு ஏற்றுமதியாளர்களுடன் இணைவதற்கு உதவுதல்.

3) நாட்டிற்கு ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு முதலீட்டை உருவாக்குதல்

- முதலீட்டுச் சபையுடன் இணைந்து சாத்தியமான நங்கூர முதலீட்டாளர்களை அடையாளம் கண்டு அழைப்பு விடுத்தல்.
- வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களின் ஆதரவைப் பெறுங்கள்.

4) இலங்கையின் தற்போதைய ஏற்றுமதியை மாற்றுதல்

- இலங்கை தயாரிப்புகளின் உலகளாவிய வர்த்தகச் சின்னத்தை பெறுவதற்கு வசதியளித்தல்
- இலங்கை கருவாவுக்கான வர்த்தகச் சின்னம் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை பொறுப்பேற்றல்.
- இலங்கை கருவாவுக்கான புவியியல் குறிகாட்டியைப் (GI) பெறுதல்.
- 'எக்ஸ்போ டுபாய் 2020' இற்கான இலங்கையின் பங்குபற்றுதலை ஒழுங்குசெய்தல்.
- தேசிய சேதன கட்டுப்பாட்டு பிரிவின் (NOCU) செயற்பாட்டுக்கு வசதியளித்தல்.
- இலங்கையின் சேதன விவசாய மதிப்புகளின் தொடரையும் நம்பகத்தன்மையையும் பாதுகாத்தல்.

- வர்த்தக தகவல்கள், சந்தை பற்றிய அறிவு, ஈ- வர்த்தக சேவைகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பான வெளியீடுகள் ஆகியவற்றை வழங்குதல்.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இணையத்தளம் மூலம் இலங்கை தயாரிப்புகளின் நிகழ்நிலை ஊக்குவிப்பு.

5) திறன்களைக் கட்டியெழுப்புவதனை மேம்படுத்துதல்.

- ஏற்றுமதி தொடர்பான விடயங்கள், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சித்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஊழியர்களின் மனித வள முகாமைத்துவம்

நிதி அறிக்கை 2019

2019 டிசம்பர் 31 வரையிலான
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின்
நிதியியல் நிலைக் கூற்று

	குறிப்புகள்	SLFRS 31.12.2019 ரூ. சதம்	SLFRS 31.12.2018 ரூ. சதம்
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாச் சொத்துக்கள்			
ஆதனம்,பொறி மற்றும் உபகரணம்	(8)	34,490,100.29	52,536,442.45
இணை நிறுவனங்களில் நிகர முதலீடுகள்-விலைகூறப்படாத	(9)	1,052,821,878.95	997,488,451.76
		1,087,311,979.24	1,050,024,894.21
ஏனைய நடைமுளை அல்லாச் சொத்துக்கள்	(10)	54,800,083.23	56,069,284.38
மோத்த நடைமுறை அல்லாச் சொத்துக்கள்		1,142,112,062.47	1,106,094,178.59
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	(11)	2,797,044.96	2,880,646.22
வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள்	(12)	145,200,571.08	141,884,667.34
முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள்	(13)	30,726,129.67	33,813,537.99
பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	(14)	13,010,416.74	27,562,559.10
		191,734,162.45	206,141,410.65
மொத்த சொத்துக்கள்		**1,333,846,224.92**	**1,312,235,589.24**
சமபங்கு மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
பெற்ற கொடைகள் - ஒப்புரவுப் பங்களிப்பு	(15)	10,014,284.00	10,014,284.00
செலவு மீதான திரட்டிய வருமானம்		1,064,982,748.96	1,010,789,603.57
மோத்த ஒப்புரவு		1,074,997,032.96	1,020,803,887.57
மானியங்கள்			
பெறப்பட்ட மானியங்கள்-ஏனையவை	(16)	26,585,000.86	31,695,603.21
		26,585,000.86	31,695,603.21
நடைமுறை அல்லாப் பொறப்புக்கள்			
முன்னேற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்	(17)	57,374,396.89	52,387,870.60
ஓய்வூதிய நலன்கள்சார் கடப்பாடுகள்	(18)	75,445,155.25	78,998,235.75
		132,819,552.14	131,386,106.35
நடைமுறைப் பொறுப்புக்கள்			
ஏனைய கொடுக்க வேண்டியவை	(19)	99,444,638.96	128,349,992.11
		99,444,638.96	128,349,992.11
மோத்த பங்கு மற்றும் பொறுப்புக்கள்		**1,333,846,224.92**	**1,312,235,589.24**

173 முதல் 188 பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி தயாரிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து 109 முதல் 119 பக்கங்களில் உள்ள குறிப்புகள். இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்குதல் இயக்குனர்கள் சபையினுடையதாகும்.சவை சார்பாக கையொப்பமிடப்படுகிறது. நிதிநிலை அறிக்கைகள் பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

பிரபாஸ் சுபஸிங்ஹ	ஜெ. விக்ரமசிங்ஹ	டபல்யு.ஏ.டி.எஸ். குணசிங்ஹ	ஜீ.ஏம். ஹேரத்
தலைவர்	**சபை உறுப்பினர்**	**சபை உறுப்பினர்**	**நிதிப் பணிப்பாளர்**

2019 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் விரிவான வருமானக் கூற்று

	குறிப்புகள்	SLFRS 31.12.2019	SLFRS 31.12.2018
		ரூ. சதம்	ரூ. சதம்
வரவு			
வருமானம்	(3)	563,709,310.35	598,941,650.93
ஏனைய வருமானம்	(4)	49,853,997.09	49,285,350.28
மொத்த வருமானம்		613,563,307.44	648,227,001.21
செலவு			
ஏற்றுமதி அபிவிருத்திச் செலவுகள்	(5)	(199,812,426.67)	(255,842,018.46)
நிருவாகச் செலவுகள்	(6)	(400,254,354.14)	(399,629,455.25)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான வருமான செலவு		13,496,526.63	(7,244,472.50)
நிதிச் செலவு	(7)	(2,084,743.82)	(985,362.28)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வருமானச் செலவின் மிகை		11,411,782.81	(8,229,834.78)
இணை நிறுவனங்களில் நிகர முதலீடுகள நட்டம்		55,333,427.19	(91,185,567.24)
		66,745,210.00	**(99,415,402.02)**
ஏனைய முழு வருமானம்			
பொறி மற்றும் உபகரணம் சொத்து மீள்மதிப்பீடுடன் தொடர்பாக பெற்ற இலாபம		-	-
ஆண்டிற்கான ஏனைய முழு வருமானம்		-	-
ஆண்டிற்கான மொத்த முழு வருமானம்		**66,745,210.00**	**(99,415,402.02)**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின்
2019 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான
சமநிலை மாற்றக் கூற்று

		அரச நன்கொடைகள்	அடைந்துகொண்டஇ லாபம்	மொத்தம்l
2017 டிசம்பர் 31 வரையிலான மீதி		**10,014,284.00**	**1,093,329,063.03**	**1,103,343,347.03**
வருமானச் செலவின் மிகை		-	(99,415,402.02)	(99,415,402.02)
முன்னைய ஆண்டின் சீராக்கல்கள்		-	16,875,942.56	16,875,942.56
2018 டிசம்பர் 31 வரையிலான மீதி		**10,014,284.00**	**1,010,789,603.57**	**1,020,803,887.57**
வருமானச் செலவின் மிகை		-	66,745,210.00	66,745,210.00
முன்னைய ஆண்டின் சீராக்கல்கள்	**(23)**	-	(12,552,064.61)	(12,552,064.61)
2019 டிசம்பர் 31 வரையிலான மீதி		**10,014,284.00**	**1,064,982,748.96**	**1,074,997,032.96**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின்
2019 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான
காசுப்பாய்ச்சல்க் கூற்று

